T. 1629.

T
629

மேடைத்தமிழ்

ஆசிரியர் :
திரு. தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார்
F. R. S. A. (London)

மதிப்புரைகள்

தி. தெ. ஜ. ஈசன் & Co.,
29/A, திருவேங்கட முதலி தெரு
சென்னை - 3

சாது அச்சுக்கூடம், சென்னை

முன்னுரை

சென்னைத் தமிழ்ச்சங்கம் இந்த நாளைக்கு ஏற்ற தமிழை வளர்க்கும் பெருந் தொண்டில் ஈடுபட்டிருக்கிறது. இதன் செயலாளன் என்ற முறையில் புத்தம் புதுத் தமிழ்நூல்களைக் கண்டு களிக்கும் பேறும், கண்டு கதறும் கையாறும் மாறிமாறி வரும். "தலைக்குத்துத் தீர்வுசாத்தற்கு" என்று சொல்லக்கூடிய நிலை அந்தப் பழையகாலத்தும் திருக்குறள் பிறந்த ஒரு முறைதான் தோன்றியது என்றால் இந்தக் காலத்தில் களிப்பினைவிடக்கவலையே பெரிதெனச் சொல்லவேண்டுமா? அத்தகைய களிப்பினைத் தந்த நூலைக்கண்டால் விடுவோமா?

"மேடைத்தமிழ்" என்ற நூல் புத்தம் புதுநூல்; தமிழில் புதிய துறையில் புதிதாக எழுந்த புது விருந்து. குடியரசு வாழ்வது மேடைத் தமிழால்தான். அதனை வளர்க்க உரிமைத் தமிழகத்தில் ஒரு நூல் எழுதிக்கொடுத்த பெரியாரை வாழ்த்தாது இருக்க முடியுமா? எழுதியவர் ஒரு பேச்சாளர். பேச்சாளியாகத் தாம் வளர்ந்த வரலாற்றில் கண்ணும் கருத்துமாய் இருந்து கண்ட அனுபவங்களின் - இன்பவெளிப்பாடு - அன்பு வெளிப்பாடே இந்த நூல். இனியதமிழ் - எளியநடை - அரியகருத்துக்கள் - ஆழ்ந்த அனுபவம் - இவையே மேடைத்தமிழ் என உருப்பெற்றுள்ளன. எதிர்காலப் பேச்சாளரை விளைவித்து உண்மையறிவின்பத் தமிழகத்தை அமைக்கும் புத்துலகத் தமிழ்ச் சிற்பி என ஆசிரியரைப் பாராட்டி இந் நூலை அரங்கேற்றி வைத்தோம்.

தமிழ்நாட்டின் இந்நாளைய தலைநகராம் சென்னைமாநகரத்தின் தலைவராய்த் தந்தையாய் அன்று வீற்றிருந்த திரு. எஸ். இராமசாமி நாயுடு தலைமை ஏற்றார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பாராட்டினார். தமிழ்ப்பெரியார் தமிழ்நாட்டுப் பெருந்தலைவர்-தொழிலுலகைக் கண்விழிக்கச் செய்த தொண்டர்க்குத் தொண்டர் - பொதுமை அறவாழி அந்தணர் - புதுத் தமிழ்வளர்க்கும் புத்தறிஞர், திரு. திரு. வி. க. வாழ்த்தினார். மகளிர் சார்பாக திரு. ஈ. த. இராசேசுவரியார் திரு நூலினை வரவேற்றனர். பத்திரிகை உலகம் 'கல்கி' வடிவம் கொண்டு வரவேற்றது. இசையுலகமும் நாடக உலகமும் வெண்திரையுலகமும் திரு. தியாகராச பாகவதர் என்ற அழகிய தமிழ் வடிவில் புகழ்ந்துபாடினர். பொது மக்கள் திரள் திரளாகக் கூடி வரவேற்றனர்.

இந்த அரங்கேற்று விழாவை 10-4-49ல் நடத்திவைத்த என்னுடைய களிப்பிற்கு இடம் உண்டோ? வாழ்க மேடைத்தமிழ், வாழ்க அதனாசிரியர், வாழ்க தெய்வசிகாமணியாச்சாரியர், வாழ்க தமிழர், வாழ்க தமிழ்நாடு, வாழ்க தமிழ், வாழ்க உலகெலாம் என எனது உள்ளம் துள்ளிக் குதிக்கிறது. நானும் வாழ்கிறேன் அன்றோ? பல்லாயிரம் தமிழர் இதனைக் கற்று இந்த இன்பத்தினைப் பெறுவீராக.

சென்னை
14-1-1950

தே. பொ. மீனாட்சிசுந்தரன்,
செயலாளன், சென்னைத் தமிழ்ச் சங்கம்

கருத்துரை

தமிழ்நாடு பலவகைக் கலைகளிலும் சிறந்து விளங்கும் பெருமை உடையது. இக்காலத்திலும் பேச்சுக்கலை முதலான பல கலைகளிலும் தமிழ்நாடு முன் நிற்கிறது. ஆனால், மற்றக் கலைகளைப்பற்றி ஆராய்ச்சி நூல்கள் இருப்பதுபோல், பேச்சுக்கலையைப்பற்றி ஆராய்ச்சி நூல் இல்லாதது ஒரு குறையாக யிருந்துவந்தது. முதல் முதலாக அந்தக் குறையைப் போக்கியது மேடைத்தமிழ் என்ற அரிய நூலாகும்.

திருவாளர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் பேச்சுக்கலையும் மற்ற அருங்கலைகளும் விளங்கிய குடும்பத்தில் பிறந்து பண்பட்டவர். தமிழ்நாட்டில் பல மேடைக்களைக் கண்டு, பல சொற்பொழிவாளர்களின் பேச்சுத் திறனையும் ஆராய்ந்து உணர்ந்தவர். மேடைத்தமிழ் என்ற இந்த நூல், ஆசிரியருடைய ஆராய்ச்சி முறையையும் நெடுங்கால அனுபவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. மேனாட்டுப் பேச்சாளர் பலரைப்பற்றிச் சிறப்பாக ஆங்கில நாட்டுப் பாராளுமன்றத்தின் புகழ் பெற்ற பலரைப்பற்றி நுட்பமான குறிப்புக்களை எடுத்துச் சேர்த்திருப்பது இந்த நூலுக்கு அணி செய்வதாக உள்ளது. சொற்பொழிவாளர்களுக்குமட்டும் அல்லாமல், பொதுவாகத் தமிழர் எல்லோருக்குமே இது பயன்படும் நூலாகும். நூலாசிரியர் செய்துள்ள இந்தத் தமிழ்த் தொண்டு போற்றத்தக்க தொண்டு ஆகும்.

ராஜா சர் மு. அ. முத்தையா செட்டியார்

பேச்சுக் கலைக்கு ஒரு நூல் தேவை என எண்ணினேன். அதை முயன்று முடிக்கும் ஆற்றலுள்ள ஒருவரை தமிழ்நாடு பெறவேண்டும் என ஆசைப்பட்டேன். என் எண்ணம் அனைத்தும் உருவாகி "மேடைத்தமிழ்" என என் எதிரிலேயே வந்து நின்றதைக்கண்ட பொழுது எனதுள்ளம் வியப்பையும், மகிழ்ச்சியையும் ஒருங்கே அடைந்தது.

கலை அறிஞர் டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் வயது தளர்ந்தும் இளமை தவறாமல், ஆக்கவேலையில் அரும்பணி புரிந்து, பேச்சு உலகிற்குப் பெருந்தொண்டு செய்துவிட்டார்கள். இனி பேச்சுக்கலைக்கு என வேறு எதுவுமே தேவையில்லாத அளவிற்கு இதனை முற்றும் முடிந்த ஒரு நூலாக முயன்று முடித்து உதவி விட்டார்கள்.

பேச்சு ஒரு அரியகலை. அதற்கு இருந்தது ஒருகுறை. அக்குறை இனி இலை என்றவாறு "மேடைத்தமிழ்" அமைந்திருக்கிறது. ஆச்சாரியார் அவர்களின் அரிய உழைப்பால் தோன்றிய இந்நூல் பேச்சுமேடைக்கு மட்டுமல்ல, தமிழ்மொழிக்கு ஒரு கலையும், தமிழ் மக்களுக்கு ஒரு துணையும், தமிழ்நாட்டிற்கு ஒரு செல்வமும் ஆகும் என்பது எனது கருத்து.

K. A. P. விஸ்வநாதம்,
ஆசிரியர், "தமிழர்நாடு"

திரு. தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியாரவர்கள் எழுதிய "மேடைத்தமிழ்" என்னும் உரைநடை நூலை, முழுவதும் படித்துப் பார்த்தேன். அழகான மேலுறைகளோடு புதிதாக வெளிவரும் பல நூல்களைப் பெறும் பேற்றைத் தமிழகம் இந்நாளிலே பெற்றுள்ளது, என்றாலும் "உருவால் மயக்கும் வெளியீடுகள் பலவற்றிற்குப் பொருளால் மயக்கும் பண்பு வாய்க்கவில்லையே" என்பதை எண்ணும் பொழுதுதான் எதிர்காலத் தமிழகம் எந்நிலையை அடையுமோ வென்று ஏங்கவேண்டி இருக்கின்றது. தொல்காப்பியரும், திரு. வள்ளுவரும் தோன்றி அரண்செய்த தமிழக நாகரீகம், புத்தகப் பொருளால் புதைபட்டுவிடுதல் கூடுமோவென அறிஞர்கள் ஐயுறு கின்றார்கள். நக்கீரரும், பரிமேலழகரும், நச்சினார்க்கினியாரும், சேனாவரையரும், அடியார்க்கு நல்லாரும், சிவஞானமுனிவரும் தோன் றிப் பரவிய "செந்தமிழ் உரைநடை" சிறிது நாட்களுக்கு பிறகு, செம்மை சான்றதெனக் கருதுதற்குரிய நிலையிலிருத்தல் கூடுமாவென எதிர்பார்ப்பதில் பிழையொன்றுமில்லை.

புதிதாக வெளிவருகின்ற உரைநடை நூல்கள் பலவற்றில் அறிஞர்களின் கருத்தைக் கவரும் கவினுடையன ஒரு சிலவே. அவற்றுள் "மேடைத்தமிழ்" முன்னிடம் பெறுவது என்பது என் கருத்து. ஆராய்ச்சியால் வெளிப்படுகின்ற பொழுதுதான், மேனிலையை அடைகின்றன. மேடைத்தமிழிலிருந்து தோன்றுகின்ற கருத்துக்க ளனைத்தும், ஆராய்ச்சியில் முகிழ்ந்தது, அநுபவத்தில் மலரும் வள முடையன என்பதை அறிஞர்கள் ஏற்பார்கள்.

மேடையேறிப்பேசி மேன்மையடைய வேண்டுமென்னுங் குறிக் கோளுடைய ஒவ்வொருவரும், இந்நூலைப் படித்து எண்ணிய பயனை எய்தலாம். மேடையேறிப் பேசி மேன்மைபெற்று வருகின்ற ஒவ் வொருவரும் இந்நூலை படித்து இது தங்கள் அநுபவத்தோடு எவ் வளவு இசைந்து வருகிறதென்பதை அறிந்து மகிழலாம்.

மேடைப்பேச்சு விளக்கம் பெற்றுவரும் இந்நாளில் நம் நாட் டிலும் மேல்நாடுகளிலும் சிறப்புடைய பேச்சாளர்களின் பண்பு கருத்து நடை ஆகியவற்றைச் செம்மையாக விளக்கி அறிஞர் பாராட்டும் அழகுமிக்க உரைநடையில் இந்நூலைத் தந்த திரு. ஆச் சாரியாரவர்களுக்குத் தமிழகம் என்றும் நன்றிசெலுத்தும் கடப்பாடு உடையது. வாழ்க ஆசிரியர்! வெல்க தமிழ்பணி! நலம் பெருகுக!

தருமபுர ஆதீன வித்துவான்
"பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை.

தமிழின் வாடையைப் பற்பலரும் விரும்பும் நோக்கிலே "மேடைத் தமிழ்" வெளிவந்தது. சிற்றுளியின் நாதத்திலே சிந்தனையைச் செலுத்தி, சிற்பத்தைச் செதுக்கிய சமூகத் தலைவர், தான் பிறந்த நாட்டின் மொழியைப் பண்படுத்த, செதுக்கிய சித்திரம்தான் மேடைத் தமிழ். கற்களில் செதுக்கிய சிற்பங்களைப் பொற்புறு கலைஞர்கள் தான் அனுபவிக்க இயலும். ஆனால், மேடைத் தமிழோ, தமிழை விரும்பிய உள்ளங்கள் யாவும் படித்து இன்புற முடியும். விஞ்ஞானத்திற்கு வழிப்பாதை யமைக்கும் காலத்தில், மெய்ஞ்ஞானமான தமிழுக்கு ஒரு பண்பட்ட பாதையை அமைத்த தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி.

S. T. பாலு, குடந்தை

மேடையில் ஏறிப் பிரசங்கம் செய்வது என்னும் அரிய கலையை நன்றாகக் கற்க விரும்புகிறவர்களும், ஏற்கெனவே பிரசங்கங்கள் செய்துவரும் அநேகரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய பல முக்கிய விஷயங்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. அத்துடன் மகாத்மா காந்தி, மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், கோபாலகிருஷ்ண கோகலே, டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, டாக்டர் பி. சுப்பராயன் முதலிய பிரமுகர்கள் பலர் செய்துள்ள பிரசங்கங் களிலிருந்து சிற்சில பகுதிகளும் இந்தப் புஸ்தகத்தில் சேர்க்கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு புத்தகாலயத்திலும் இருக்கவேண்டிய ஓர் அரிய பொக்கிஷம் இது என்றே கூறவேண்டும்.

ஆனந்த விகடன்'

MEDAI TAMIL

By

T. M. Daivasikhamani Achariar, F. R. S. A. (LOND)

OPINIONS

"*Medai Tamil*" is a complete book on elocution in Tamil. The author's penetrating insight and practical experience in the field have made the book exhaustive and of lasting value. It is an admirable work useful to aspirants of public speaking.

(*Novr. 1944*) *Rt. Hon'ble V. S. Srinivasa Sastriar.*

* * * * *

"Your book '*Medai Tamil*' is really a fine sumptuous, and very useful production. You deserve to be congratulated on this excellent work on platform oratory in Tamil. It is first of its kind, and gives a very full and discriminating account of the fascinating subject."

Dr. C. R. Reddy, M.A. (Cantab) Hons., D. Litt.
Pro - Chancellor of Mysore University

* * * * *

"The finer vibration of the inner soul, unfolding itself in unceasing waves under a spontaneous urge seeking expression to the outer world..." This is the raw material at the disposal of a speaker. How best is this to be rythmically tuned up to flow as a melodious speech so as to kindle the same feeling and thought in the hearers is in short the theme of *Medai Tamil*. A finished orator and architect of renown, the author is endowed with the spirit of scientific research and creative genius which always strive to produce treasures of art. This is no duplication of any book on oratory. A study of great orators of all time, the secrets of their success, different methods persued by them are all given in the book. Several excerpts culled up from the addresses of the masters of that great art are all given to illustrate the fundamentals of oratory. A scientific analysis of speech-making in all its aspects and its relation to all possible occasions that may arise in modern social life is very illuminating. Rules of guidance instil confidence in readers. Quantitatively, it is a great encylopaedia, with a mass of useful and rare information, anecdotes, experience of great lawyers and famous songs-

ters, secrets of tuning up tone, holding up breath so as to command a continuous flow of speech with ease for a considerable time, platform presence, mass psychology, biographical hints on historical and national personalities. Book on oratory is that which contains the rules regarding effective speech. Such a book usually would be dry and uninteresting as philosophy or grammar. But the genius of the author has made it attractive, vivid, interesting, and easily understandable. Decidedly the work is superior to any book on oratory, in that many original ideas the rich heritage of the Tamil language and culture are stamped on every page of the book."

An Academician.

*   *   *   *   *

"I have, with pleasure and interest, thoroughly read *Medui Tamil.* You have really done a very great service to Tamil Nad in writing this book. I never knew that you have made such a deep study of the art of public speaking and your book will be a standing monument for your culture, erudition, and public service. I would advise the Government of Madras to publish an abridged edition of your book, and prescribe it for S.S.L.C., and Intermediate students. Your book is undoubtedly an excellent contribution to the future political and cultural advancement of the Tamilians." *Dr. P. Varadarajulu Naidu.*

*   *   *   *   *

"The numerous well-worded appreciation from highly distinguished public men like the silver-tongued orator, the Right Honb'le Sastri, and Tiru. V. Kalyanasundara Mudaliar are enough to commend to the public this admirable book on the art of elocution. Himself an orator of no mean order, Mr. Daivasikhamani Achariar has given us the fruits of his vast research and valuable experience in this work, the first and the best of its kind in Tamil. The book is in two parts, each made up of a number of sections. The nature of a good platform, the essential requisites of a good and successful public speaker, the fine traits of an able debater, and the duties of a President who controls debates or speeches have all been well enunciated. Sound learning, strong and retentive memory, self-confidence and a systematic preparation of the subject to be handled are regarded as vital factors. The choice of

the words employed, the need for brevity and clarity, the personality and dress of the speaker, and the different kinds of audience have all been well treated in the course of this book, and instructions as to how to begin and end the speech successfully have been given. The place in public speeches for choice quotations and parables and their relative importance are then discussed. The writer's observation that the assent or dissent of an audience depends upon the perorati0u or the concluding remarks of the speaker is worth attention. In the concluding portion of the first part we have a Tamil rendering of the famous letter of Lord Chesterfield addressed to his son and the words of practical wisdom bearing on platform oration given by the distinguished orator Mr. Gladstone.

The second part deals with the antiquity of Tamil, the necessity to talk boldly, the need to avoid acrimonius or abusive references and the tact ot the speaker in framing his speech to suit his audience. Here the writer points out how the use of happy and felicitous words will enable him to manage or tackle even a hostile audience. A speech, he writes, that is based on solid truth and that evinces depth of thought and sincerity of feelings is the best.

Emotional speeches are then taken up for treatment and a number of illustrations from the speeches of great celebrities are cited. Wise maxims culled from famous speeches, extracts from the lectures and orations of eminent men both in the East and the West, and a select glossary of Tamil words come in as an appendix.

The reader will scarcely fail to discern the author's deep and first-hand knowledge of the subject. Every page is full of useful information for orator or speaker. Portraits of world-renowned orators adorn the pages of the book, which is neatly printed and attractively bound. The author commands a chaste and lucid style and the humorous way in which he presents his ideas or observations is to be highly commended. Apt and telling speeches rendered into Tamil to serve as illustrations, considerably enhance the value of the book." —*Indian Express*

* * * * *

"This book is the result of a labour of love spread over many years. It is in the words of the Rt. Hon. V. S. Srinivasa Sastriar 'a complete book on elocution in

Tamil.' It is divided into two parts containing 21 and 23 sections with three supplements—collection of wise sayings on elocution, a gist of some of the speeches of great orators of Britain, America, India, etc., and a lexicon of English words used in public speech with their meaning in Tamil. It has a lively Foreword couched in dramatic Tamil from the able pen of Sri T. V. Kalyanasundara Mudaliar. Figures of 81 eminent men are found in 20 plates.

Since a public lecture or a parliamentary sitting has both a President and a Speaker or Speakers, the author elaborately mentions the requisites for both of them. Want of scholarship, want of experience, want of sincerity and want of character in a lecturer will easily expose him to the audience. He should face the audience and never turn his back towads it. Enthusiasm, a well-modulated voice, temperate speech, the choice of simple expressions, avoidance of obsolete words, mannerism and unnecessary gestures, devotion to God and righteousness are some of the qualities which a lecturer should always cultivate. A short and direct introduction leading to the topic on hand, well-connected ideas, one leading to another and a short summary by way of conclusion are the requisites to make a speech successful."

—*Hindu*

* * * * *

"This is a comprehensive work in Tamil on elocution, oratory and rhetoric, and its usefulness is enhanced by the translation it embodies of speeches and writings of famous English men of letters and speakers. The author points out that to be a good speaker and debater it is necessary to have wide, exact and up-to-date knowledge of the subject on which one speaks, as well as a good memory, mental strength and self-confidence. Many interesting illustrations are given. The author does not underestimate the judgment of an intelligent modern audience when he says that whether the audience agrees or disagrees with a speaker depends upon the latter's peroration or concluding remarks. At the present time most speakers and listeners regard lofty perorations as artificial, and expect simplicity and naturalness both in speech and writing.

Mr. Daivasikhamani Achariar also explains principles governing the art of writing and his book is an aid to composition. There is an instructive chapter on the development of Tamil literature also."

—*Mail*

மேடைத் தமிழ்

மதிப்புரைகள்

“ நாவன்மை எது ? இவ்வினுவுக்கு விடை யிறுப்பது இந்நூல். நாவன்மை விளக்கமே இந்நூலின் உள்ளுறை என்பது தேற்றம். நாவன்மை நூலில் யாண்டில்லை ? யாண்டும் யாண்டும் நாவன்மையே. ‘மேடைத் தமிழ்’ நாட்டை வளம்படுத்தும்; வாக்காளரைப் பண்படுத்தும்; சட்ட சபையைச் சீர்செய்யும்; நல்லமைச்சை அமைக்கும் ”

திரு. வி. க.

❁

“ ‘மேடைத் தமிழ்’ அரியதொரு இலக்கியப் பொக்கிஷம். பேசுவது எங்ஙனம், இலக்கணம், எவரைப் பின்பற்றினல் நல்லது என்றவற்றை யெல்லாம் விளக்கப்பட்டிருக்கின்றன. பேசும் தமிழுக்கு உதாரணமாக விளங்குபவர் திரு. வி. க. அவர்கள் இந் நூலுக்கு அணிந்துரை அளித்துள்ளாரென்றுல், அது சிறந்த நூல் என்பதில் சந்தேகமில்லை. இனிய, எளிய அழகிய தமிழே ‘மேடைத் தமிழ்’. ‘தமிழ்’ என்றுல் இனிமை. தமிழ்ப் பேச்சில் இனிமை வேண்டும். கவர்ச்சி வேண்டும். இதை நூலாசிரியர் விளக்கித் தமிழன் பண்பாட்டை எடுத்துக் காட்டுகிறுர். திருவள்ளுவர் முதலாகப் பாரதி ஈறுகச் சொல் பற்றிக் கூறியிருப்பதைப் பின்பற்றி இக்காலத்திற் கேற்றவாறு ‘மேடைத் தமிழ்’ நூலை ஆசிரியர் எழுதி யுள்ளார். அதைக் கற்றுணர வேண்டும். போற்ற வேண்டும்.”

Prof. **ரா. பி. சேதுப்பிள்ளை**, B.A., B.L.
சென்னைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் தலைவர்

❁

“ ‘மேடைத் தமிழ்’ என்ற சிறந்தொரு புத்தகத்தை எழுதிய பெரியார் தெய்வசிகாமணி ஆச்சாரியார் இன்று பேரறிஞர்கள் முன் னிலையில் அதை அரங்கேற்றுகிறுர். ஆசிரியர், வள்ளுவன் வகுத்த வழியைப் பின்பற்றி ‘மேடைத் தமிழை’ப் பண்படுத்தி இருக்கிறுர்.

எஸ். இராமசுவாமி நாயுடு, சென்னை மேயர்

❁

“ பல வருட காலம் இரவு பகலாக உழைத்து எழுதி, அச்சிட்டு அற்புதமான ‘மேடைத் தமிழ்’ புத்தகத்தை ஸ்ரீ தெய்வசிகாமணி ஆச்சாரியார் வெளியிட்டதற்கு அவரைப் பாராட்டுகிறேன். பாராட்டு தலுக்கு அறிகுறியாகப் பக்தி சிரத்தையுடன் புத்தகப் பிரதி யொன்றை வாங்கிக்கொள்கிறேன்.” **‘கல்கி’ ரா. கிருஷ்ணமூர்த்தி.**

"தமிழுக்குத் தனியான விரிவான மேடை நிறுவப்படுவதற்கு 'மேடைத் தமிழ்' நூலில் பல அருமையான கருத்துக்கள் கலையாகக் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. கலாசாலைகளில் பாடமாக வைத்துப் போற்றி வளர்க்கப்பட வேண்டிய நூல்."

—டாக்டர், மு. வரதராசனார், M.O.L., Ph.D.

⊕

"நல்ல தமிழ்ப் பேச்சு பேசவும், கேட்கவும் 'மேடைத் தமிழ் உதவும். பல அரிய கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. அப்புத்தகத்தைத் தந்த ஆச்சாரியாருக்கு நன்றி கூறுவோமாக."

—ஈ. டி. இராஜேஸ்வரி அம்மையார், M.A., L.T.

⊕

"தமிழ் தன்னிடையே தோன்றிய அறிஞர்களை வணங்குவதில் பின்னின்றதில்லை. எதிரிலே புகழும் பேறு இன்று 'மேடைத் தமிழ்' ஆசிரியருக்குக் கிடைத்திருக்கிறது. ஆயிரம் பிரதிகளே அச்சிடப் பட்டிருப்பதால் அப்புத்தகத்தை விரைவில் வாங்கித் தமிழ்ப் பெரியார்களைக் கௌரவிக்கும் முறை வழுவாமல் தமிழ் மக்கள் நடக்க வேண்டும்."

பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
M. A., B. L., M. O. L.

⊕

"'மேடைத் தமிழ்' வருங்கால இளைஞர்களுக்கு ஒரு பெரும் கலை இலக்கியம். சிறந்த கருத்துக்களை நூதன முறையில் திரட்டித் தந்துள்ளதற்கு இளைஞர்கள் சார்பில் ஆசிரியரை வாழ்த்துகிறேன்."

—வித்வான் அன்புகணபதி

⊕

"நமது தேசத்தில் தமிழ்ப் பெரியார்கள் பலர் பல அரிய பெரிய நூல்களை இயற்றி இருக்கின்றனர். சில நூல்கள்தான் எல்லோராலும் போற்றப்படுகின்றன; படிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் அச்சிலர் பல நூல்களைப் படித்து, கற்று, தங்கள் நூல்களை நூதன வழியில் உலகுக்குப் பயன்தரு முறையில் இயற்றியிருப்பதேயாகும். இதற்கு நன் மதிப்பு கிடைக்கிறது. எல்லோராலும் போற்றப்படுகிறது. ஸ்ரீ தெய்வசிகாமணி ஆச்சாரியாரின் 'மேடைத் தமிழ்' புத்தகம் அத்தகையதே. இதை நன்கு வாசித்து, பள்ளிக் கூடங்களில் பாடமாக வைத்துப் போற்றி வளர்க்க வேண்டும்."

கந்தர்வ கானரத்னம் எம். கே. தியாகராஜ பாகவதர்

மகாமகோபாத்தியாய பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார் எழுதியது:

" குலோத்தாரகர் திரு. T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் எழுதி வெளியிட்ட "மேடைத்தமிழ்" என்னும் இந்நூல் தமிழ் மக்களுக்கு ஒரு நல்விருந்தாகும். இலக்கியம், அரசியல் முதலியவை பற்றி நாவீறு படைத்த அறிஞர்களின் பலதிறப்பட்ட சொற்பொழிவுகளின் பகுதிகளை யெடுத்துக் காட்டிக் கொள்ளத் தக்கன இன்ன, தள்ளத் தக்கன இன்னவென்று ஆசிரியர் இந்நூலிற் குறிப்பிட்டுள்ளார். பேச்சாளர்களின் மனநிலை, நிரல்படக் கூறும் இயல்பு, நேரிய முறையில் அவையஞ்சாமை, இடையில் எழும் வினுக்களுக்குத் தாழாமல் விடையிறுக்கும் ஆற்றல், அவைக்களத்துள்ளாரைத் தம் வயப்படுத்துந் தன்மை முதலியன பற்றி ஆசிரியர் விளக்கி யிருக்கும் குறிப்புக்கள் பெரிதும் பயன் விளைவிப்பன. பேசுவோர் மனம் போனபடி செல்லாமல் ஒரு பொருளை எப்படித் தொடங்கி விரித்து எப்படி முடிக்க வேண்டுமென்பதற்கு வரம்பிட்டிருத்தல் பாராட்டத்தக்கது. இத்தகைய நூலாக்குதற்குக் கல்வியறிவின் துணை மாத்திரம் போதியதாகாது. பல அவைக்களங்களுக்குச் சென்று பல பேரறிஞர்களின் பலதிறப்பட்ட சொற்பொழிவுகளைக் கேட்டு எய்தும் சிறந்த அநுபவமும் இன்றியமையாததாகும். இந் நூலிற் காணப்படும் செய்திகள் சில தமிழறிஞர்களின் பேச்சு முறையிற் கண்டதுண்டு. ஆயினும் மேடைப் பேச்சுப் பற்றி இது வரை தமிழில் தனியே யாரும் ஒரு நூல் எழுதி வெளியிட்டதில்லை. சொல்வன்மையைப் பற்றித் திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் நுண்ணிய பல இயல்புகளைக் காணலாம். அவர் முடிவாக "விரைந்து தொழில் கேட்கு ஞாலம் நிரந்தினிது, சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்று சிறந்த பேச்சாளர் திறமைக்குக் கூறிய பயன் கண் கூடாக உணரப்பட்ட தொன்று.

சிற்பநூல் வல்ல தெய்வசிகாமணியார் இந்நூல் முகமாகத் தமிழ் மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளாரென்றே கூறலாம். இக் காலத்தில் மேடைப் பேச்சாலே எல்லாக் காரியங்களும் செய்யப்பட்டு வருகின்றன. கற்றறிவுடைய இளைஞர்கள் பெருங்கூட்டத்தில் தாம் கருதிய பொருள்களை எப்படித் தொடங்கி எவ்வாறு முடிக்கலாமென்று தெளிந்து கோடற்கு இது சிறந்த கருவியாகும் என்பது என் கருத்து. மேடைப் பேச்சு, எளிமை, இனிமை, பொருட் செறிவு, விளக்கம், கேட்பாரைக் கவரும் ஒலிநயம் இவற்றையுடையதாக இருக்க வேண்டுமென்பது, அம் முறையில் ஒழுகுவாரனைவரும் உணர்வர். இவ்வெல்லாவற்றிற்கும் எடுத்துக் காட்டுக்களுடன் இந் நூலில் விளக்கக் குறிப்புக்கள் தந்திருப்பது பாராட்டத்தக்கது. கால நிலை நோக்கி இந்நூலைத் தமிழகத்துக்கு அளித்த தெய்வசிகாமணியார் புகழொளி யாண்டும் நிலவுக."

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், தஞ்சாவூர் :

"இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் இடை நிற்கும் இசையே இதயம் போன்றது ; இயலையும் நாடகத்தையும் இணைத்து நின்று இன்பம் பயப்பது. அதே போன்று, மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களிலும் மத்தியிலுள்ள வாக்கே சத்தியில் மிகுந்தது; மனத்தையும் காயத்தையும் தன் இனத்தன வாக்கும் மாண்பிற் சிறந்தது. வாய்மையும் தூய்மையும் செறிந்த வாக்கினால் உலகில் நிலவும் தீமையைப் போக்கிச் சேய்மையில் உலவும் இகலையும் வெல்லலாம். ஜனநாயகம் என்பது வாக்கை அடிப்படையாகக் கொண்டது ; வாக்குரிமை என்பது அதன் நீக்கரிய குணம். அன்று மன்னர்கள் ஆண்டது வாளால் ; இன்று மக்களே ஆள்வது வாக்கால். அன்று வாள் வீரருக்கிருந்த மதிப்பு இன்று வாய் வீரருக்குண்டு ; இருத்தலும் வேண்டும்.

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

என்னும் குறள் இக்காலத்துக் கெனவே தோன்றியது போலும்!

"விரைந்துதொழில் கேட்கு ஞாலம், நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற குறள் வெண்பாவின் பெரிய விளக்கமே 'மேடைத்தமிழ்' எனும் அரிய நூல். விடுதலையும் குடியாட்சியும் நம்நாட்டில் விரைந்து வேரூன்றி விளங்கி நிலவ விரும்பும் வித்தகர் ஒருதலையாகக் கற்று ஒழுக வேண்டிய நூல் இம் 'மேடைத்தமிழ்.' காலத்திற் கேற்ற கோலத்துடனும் நாட்டிற்கேற்ற நலங்களுடனும் நம்மிடையே தோன்றிய இம் மெய்நூல் ஒவ்வொரு தமிழனின் கைந்நூலாக மிளிர்தல் வேண்டும். பேச்சுக் கலையின் நுணுக்கங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு தலைப்பின் கீழும் சகல விதமான விஷயங்களையும் சாங்கோபாங்கமாக விளக்கியுள்ள இந் நூலாசிரியர் நம் தமிழ் மக்களுக் காற்றியுள்ள இத் தொண்டின் அருமையும் பெருமையும் அளவிடற் கெளிதன்று. மேடைப் பேச்சாளரின் தோற்றம், உடை முதலிய புறநுட்பங்களிலிருந்து, அவரது அகத் தூய்மை, நினைவாற்றல் முதலிய அகநுட்பங்கள் வரையுள்ள சகல அம்சங்களையும் நுண்ணிய அறிவுடனும் நூதன ஆராய்ச்சியுடனும், புள்ளி விவரங்களுடனும் உள்ளுறைத் தத்துவங்களுடனும் தெள்ளிதின் விளக்கியுள்ளார் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார். தாமே ஒரு பேச்சாளராகையின் ஏனைய பேச்சாளரை அளந்தறிய இவ் ஆசிரியருக்கு எளிதாயிருந்தது. எல்லாப் பேச்சாளரையும் இந்நூல் எடுத்தாளவில்லை ; அவ்வாறு எடுத்தாளுதலும் இயலாத தொன்றும்.

எனினும், "யாம் அறிந்த நூல்களிலே இது போன்றபயன் தருநூல் எங்கும் காணோம்" என்று பாட எனது உள்ளம் விழைகின்றது ; நா எழுகின்றது !

'மேடைத்தமிழ்' நூலாசிரியர் ஒரு மேதைத் தமிழ் நூலாசிரியரே. 'மேடைத் தமிழ்' நம் மென்மைத் தமிழ் அன்னையின் ஆடைத் தமிழாக மிளிர்கின்றது. மணிகளுட் சிறந்தது தெய்வ சிகாமணி ; ஆசிரியருட் சிறந்தவர் திரு. ஆச்சாரியார் ; நூல்களுட் சிறந்தது 'மேடைத் தமிழ்.' எனவே, செல்லும் வாயெல்லாம் சிறப்பின் சிகரத்தைச் செவ்விதின் அணிசெய்து சீருடன் வாழ்பவர் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள்.

தமது அறிவு, ஆராய்ச்சி, அநுபவம் பன்மொழிப் பயிற்சி, கலையுணர்ச்சி, நாட்டுப்பற்று தாய்மொழி வேட்கை, தொண்டில் ஆர்வம், தூயமனோ நிலை ஆகிய இப்பண்புகள் அனைத்தும் பாந்து நிரம்பிய பாற்கடலினின்றும் இவ் ஆசிரியரால் கடைந் தெடுக்கப் பெற்ற இன்னமுதமே 'மேடைத் தமிழ்'. தெய்வசிகா மணியாகிய திருமால் தமிழாகிய தேவர்கட்குத் தம் 'மேடைத் தமிழ்' எனும் அருளாரமுதத்தைத் திரட்டி எடுத்து வழங்கியுள்ளார். "மூலபண்டாரம் வழங்குகின்றார் வந்து முந்துமினே" என்று சில முண்டாம் வண்ணம் தென் தமிழ் நாட்டிடைச் செப்பிடுவோம் !

வாழ்க திரு. ஆச்சாரியார் ! வெல்க மேடைத் தமிழ் !"

பேராசிரியர் - உயர்திரு. **எம். ஏ. துரைஅரங்கனார்,** M. O. L.
தியாகராயர் கல்லூரி, மதுரை :

"மேடைத் தமிழ்" நூலை ஒரு முறை மட்டுமன்று, இருமுறை, ஒன்றிய உள்ளத்துடன் நன்கு படித்தேன். பயின்றேன் என்று கூறவும் அவா. ஆனால் இன்னும் பல முறைப் படித்த பின்னர் தான் பயின்றேன் என்று கூறி என் அவாவினை முற்றுவிப்பேன். இந் நூலுக்கு என் மதிப்புரை எதற்கு ? மற்றவர் மதிப்புரைகள் தாம் யாதுபயனை அளிக்கவல்லன ? மேடைத்தமிழை அளந்தறிதற்குரிய ஆற்றல் முன்னரே பெற்றிருந்தாலன்றோ, யாவராயினும் சரி, மதிப்புரை வழங்க முன்வருதல் தகுதியாகும் ! இப் படைப்பு தமிழுலகிற்கே புதிது ; ஒப்புயர்வற்ற ஒன்று. நிறுத்தக் குறிகள், கட்டுரைக்கு எங்ஙனம் அழகும் ஆக்கமும் தந்தனவோ, அங்ஙனமே மேடைத் தமிழ், பேச்சுக்கு, அழகும் ஆக்கமும் தருவதாகும்.

தமிழ்க் கூட்டங்களுக்குச் சென்றால் தலைவலி இல்லாமல் திரும்பவே முடியாது. தலைவர், முன்னுரையாக நீண்ட சொற்பொழிவு ஆற்றுவார். பின்னர்ச் சொற்பொழிவாளர், தலைவர்

உரையை மறுத்துப் பெரும்பொழுது பேசிவிட்டுத் தம் சொற்பொழிவில் ஒரு கூற்றினை விளக்குதற்குக் கிளைக்கதை ஒன்றை விரித்துக் கூறிக்கொண்டே சென்று, இடையில் கடிகாரத்தைப் பார்த்ததும் தம் உரையை முற்றும் கூறிமுடிக்க நேரமில்லையென்று மணி மீது பழிபோட்டு விடுதலை பெறுவார். முடிவுரையாகத் தலைவர், ஒரு தொடர்பு மில்லாத மற்றொரு சொற்பொழிவை ஆற்றித் தம் புகழை நாட்ட முயல்வார். பெயரையும் பதவியையும் கேட்டுக் கூட்டத்திற்கு வந்தவர், பெரிதும், ஏமாற்றம், அடைந்து வீடுதிரும்புவர். 'மேடைத் தமிழ்', தமிழுலகில் புகுந்து, இனிமேல் தமிழ்க் கூட்டத்திற்குப் போவோர் தலைவலியின்றித் திரும்புமாறு செய்யும் என்று எண்ணி எண்ணி மகிழ்கின்றேன். தமிழுலகிற்கு ஒப்புயர் வற்ற ஒரு தனித்தொண்டு செய்ய வேண்டுமென்று பல்லாண்டுகள் அரும்பாடு பட்டுப் படைத்து, 'மேடைத் தமிழ்' என ஒரு புதையலை - அள்ள அள்ளக் குறையாத புதையலை - உதவிய வள்ளலாகிய திரு. ஆச்சாரியார்.

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து" -

என்ற பொன்மொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குகின்றார்.

அவர்தம் உழைப்பு, மதி நுட்பம், நூலறிவு, புது வது படைக்கும் ஆற்றல், ஆற்றல் மிகுதிக்கு ஏற்பப் பெருமிதம் அடைதற்கு மாறாகப் பணிவு, மனமொழி மெய்களின் அடக்கம், பொறுமை, ஊக்கம், விடா முயற்சி இன்ன பல பண்பு நலன்களெல்லாம் "மேடைத் தமிழ்" நூலில் மிளிர்கின்றன. அன்னவெல்லாம் படிப்போர், ஏன், பயில்வோர் பெற்றுப் பயனடை வோராயின் அங்ஙனம் அடைதலே அவரெல்லாம் மேடைத் தமிழுக்குச் செய்யும் கைம்மாறும்; தமக்குத்தாமே பெரும் மதிப்பாகும்.

மேடைத் தமிழின் முற்பகுதி கல்லூரி மாணவர்கட்குப் பாடமாக இருத்தற்குச் சாலவும் தகுந்தது. ஆசிரியர் வேண்டுகோள் இன்றியே முதற் பகுதியைக் கல்லூரிகளில் பாடமாக வைக்க முந்துதல் செய்தல் முறையாகும். கரும்பு தின்னக் கூலி வேண்டுங்கொல்? இந்நூற் பயிற்சியால் மேடையில் மதிப்புப் பெறுவேன், அதற்காக என்றும் ஆசிரியருக்குக் கடமைப் படுவேன். தமிழ் வாழ்க; மேடைத் தமிழ் வெல்க!"

உயர்திரு. டி. நெல்லைக்குமார் ஆச்சாரியார்
B. A., B. L., திருநெல்வேலி :

"மேடைத்தமிழ்" நூலைக் கையில் எடுத்தால், ஒரு புத்தகத்தைப் படிக்கிறோம் என்ற உணர்ச்சி போய் ஆசிரியருடன் நேருக்கு

நேர் அளவளாவி நமக்குத் தேவையான விஷயங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் சீரிய முறையில் நூல் தொகுக்கப் பெற்றிருக்கிறது.

பல்வேறு காலங்களில், பல்வேறு தேசங்களில் தோன்றிய நாவலர்களின் பிரசங்கங்களை ஆராய்ச்சியால் அலசி யெடுத்து நாவன்மையின் வெற்றிக்கு அடிப்படையான நுட்பங்களைக் கண்டு தேர்ந்து, அவற்றைத் தம் சொந்தப் பிரசங்கங்களில் பிரயோகித்துப் பார்த்து, தற்கால ஜனசமுதாய வாழ்விற்கு சிரேட்டமானவற்றையும், சுலபமாகக் கையாளக் கூடியவற்றையும் ஆய்ந்தெடுத்துப் பல தொகுப்புகளின் கீழ் விவரித்துக் காட்டியும் மாதிரிப் பிரசங்கங்கள் மூலம் நிரூபித்தும் பலதர சித்திரப் படங்கள் மூலம் அழகுபடுத்தியும், இவ்வரிய கலைவன்மையை தமிழ் மக்களனைவரும் அடைந்து ஆனந்தமடைய வேண்டும், ஜனநாயகம் செழித்தோங்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன், "மேடைத்தமிழ்" ஆசிரியர் இந்நூலை நந்தமிழ் நாட்டுக்கு அளித்திருக்கிறார்.

பிரசங்கத்தை எழுதிப்படிப்பதா, மனப்பாடம் செய்வதா, திடும் பிரவேசமாகப் பேசுவதா, உயர்த்திப் பேசுவதா, வேகமாய்ப் பேசுவதா, பேச்சை எப்படி எடுப்பது, எப்படித் தொடுப்பது, எப்படி முடிவுரை நிகழ்த்துவது, தர்க்கம் எப்படிச் செய்வது, அக்கிராசனம் வகிப்பதெப்படி, சட்ட சபையில் எப்படி விவாதிப்பது, நீதி ஸ்தலத்தில் எப்படி தர்க்கிப்பது, ஓட்டுரிமைக்கு எப்படி வாக்காளரிடம் பேசுவது, ஒலி பெருக்கியின் உதவி அவசியமா என்கிற பலப்பட்ட அரிய விஷயங்களை இந்நூல் தன்னுள் கொண்டிருக்கின்றது. ஒருவர், மேடைத் தைரியத்தையும் பேச்சு வன்மையையும் பெறுதற்கு ஒரு பிரசங்கக் கல்லூரி இருந்து பத்தாண்டு பத்தாயிரம் ரூபாய் செலவில் பெறும் பலனனைத்தையும். அத்தனை பொருட்செலவும் காலதாமதமுமின்றித் தரவல்ல கலைக் களஞ்சியமே "மேடைத்தமிழ்."

ஆசிரியர் எடுத்துக்கொண்டது அபாரமான வேலை. சங்கீதம் கடினமான ஒரு கலையே. ஆனால் அதையாவது சுலபமாய் கற்பிக்கலாம்; கற்கலாம். உதாரணமாக சிறுவர் சிறுமிகளையும் சுலபத்தில் பாடப் பழக்கி வைத்து விடுகின்றனர். 'மேடைப் பேச்சோ' பெரிய பட்டதாரிகளையும், ஆராய்ச்சியாளர்களையும் - ஏன் - பெயர் பெற்ற பேச்சு நிபுணர்களையுமே சமயத்தில் திணறடித்து, திக்குமுக்காடச் செய்கிறது. சகல கலைகளிலும் மிகக் கடினமான கலை இது. இவ் வரிய கலையை மேடைத்தமிழ் ஆசிரியர் பல தொகுப்புகளின் கீழ்த் தெள்ளத் தெளிய விளக்கிப் பேச வழிகாட்டியுள்ளார்.

இந்நூல் ஒவ்வொரு தமிழ்மக்களின் வீட்டிலும் இருக்க வேண்டிய பொக்கிஷம். கல்விச் சாலைகளிலும் வாசகச் சாலைகளிலும் இந்த அரிய நூல் இல்லையேல் அது ஒரு பெருங்குறையே யாகும். ஏனெனில் இதற்குப் பதிலாக வேறு புத்தகம் தமிழில்-ஏன்-எந்த பாஷை

யிலும் இல்லை. இந்நூலையே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியாக்கினால் அது மேல் நாட்டார் நூல்களிலும் சிறந்து விளங்கும்; புதுமையாகவும் இருக்கும். அண்மையில் தமிழ் மாகாணம் தனி மாகாணமாகி, உயர் நீதிமன்றங்களிலும் பாராளு மன்றத்திலும் 'மேடைத் தமிழ்' சிறப்புடன் வரவேற்கப்படுவது உறுதி. அதை எதிர்பார்த்து இப்போதே உயர்தரக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் 'மேடைத்தமிழை' ஒரு தனிக்கலையாகவும் பாடபுத்தகமாகவும் அமைத்தல் கல்வி இலாகாவின் முக்கியமான கடமையாகும். 'மேடைத்தமிழ்' வாழ்க. வாழ்க நம் தெய்வசிகாமணியார்."

Dr. B. நடராஜன், M. A., D. Litt.

சென்னை அரசாங்கப் பொருளாதார் ஆலோசகர் :

" மேடைத் தமிழைப் படித்தேன். ஆற்றொழுக்குப் போன்ற நடை. புதுக்கருத்துக்கள் பெருக்கெடுத்து வருகின்றன. பேச்சிலக்கியத்திற்கு இலக்கணம் செய்தீர்கள்; தமிழ் இலக்கியத்தில் தனியிடம் பெறுவதாக இருக்கின்றது நூல். தமிழர்கள் அறிந்து போற்றுவார்களாக."

சுவாமி சண்முகானந்தர் :

" இத்தராதரத்திலுள்ள தமிழ்மேடைக் குற்றங்களையெல்லாம் அராவும் அரமாகும் "மேடைத்தமிழ்" நூல். அதனைத் தமிழ்மக்கள் படித்துப்படித்து, பழகிப்பழகிப் பயன் பெறுவார்களாக."

திவான்பகதூர்

உயர்திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், கோவை :

" தங்களுடைய "மேடைத்தமிழ்" நூலை முற்றிலும் படித்தின்புற்றேன். தாங்கள் தமிழுக்கும் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆற்றியிருக்கும் சேவை பலவற்றில் ஒன்றே இம் 'மேடைத் தமிழ்' என்னும் அரிய நூல். இந்நூல் தமிழர் ஒவ்வொருவரும் பொக்கிஷமாகக் கருதிப் படித்து நற்பயனடைவார்களென நம்புகிறேன்."

" தமிழ்நாட்டின்கண் முதலாவதாக, வெளிவந்து மிளிரும் இந்நூலை முற்றும் படித்தின்புற்றேன்.

“ மாணவை மண்ணுறுத்துஞ் செல்வமுமுண்டு சிலர்க்கு ” என்றதனால் எல்லாருஞ் சொல்லின் செல்வராவதருமை. பிறவிப் பேச்சாளராகவோ, “ செந்தமிழும் நாப் பழக்கம் ” என்றாங்கு பேசிப் பழகிய பேச்சாளராகவோ, பதினாயிரத்தொருவரைப் பார்க்கலாம். அவ்வொருவர் ஐந்திலக்கணங்களமைந்தவராயின் மேடை, பட்டி மன்றம், ஏறிப் பேசியலங்கரிக்கவும், தாம் கற்ற கல்வியை உய்த்துணர்ந்து சொல் வன்மையுடையராய்த் திகழவும் “ பொன்மலர் நாற்றமுடைத்து ” என்பபோற்புகழவும் தகுதியுடையராவர்.

அவ்வாறின்றி வார்த்தைகளைக் குழறி வழிந்து ‘ புரிகிறதோ ’? ‘ நான் சொல்லப் போவது தெரியுமா ’? என்ற வினாக்களெழுப்பியும் ஆரவாரித்து அவையஞ்சாது உரையாடுவோர் இந்நாள் மேடைக்குத் தகுதியுடையராகார்.

ஆகவே முறை தெரிந்து சுருதி, யுக்தி, அனுபவங்களையொட்டி, சொன்னயம், பொருள் நயந்தொடர நன்னயமாக சுருக்கம், மெய் விளக்கம், இருமையும் பயனுந்தொடுத்துச் சொற்சோர்வு படாமல், தித்திக்கப் பேசி கேட்போர் மனத்தைக் கணத்திற் பிணித்திட்டு தன் வயப்படுத்திநன் மதிப்புறுதலே, செஞ்சொற்பெருக்கும் திறமையும் பேச்சாளருக்குரிய வெற்றியுமாகும்.

இவ்வகை வெற்றி கண்ட ‘மேடைத்தமிழ்’ நூலாசிரியர் பற்பல மேடைகளேறி அற்புதமாகச் சொற்பொழிவுகளாற்றியும், பொற்புறக் கேட்டும், மேனாட்டவரின் மேடை நூல்களை யாய்ந்தும், சுவானுபவத்துடன் பேச்சை யெடுத்துத் தொடுத்து முடிக்கும் சாதுரியத்தைப் பல எடுத்துக்காட்டுக்களால் கோவை செய்தும், பேச்சு வரன்முறைகளை விளக்கியும், வெளியிட்டுள்ள இவ்விழுமிய ‘ மேடைத் தமிழ் ’ நூலைப் படித்துத் தீஞ்சொற்பொழியும் ஆற்றலைப்பெற்று எல்லோரும் பேரின்பம் எய்தலாம் ; வாக்கின் மன்னரெனத் திகழலாம். மேடைத் தமிழும், ஆசிரியரும் வாழி நீடூழி !”

“சிவநேசன்” பத்திரிகாசிரியர்
ராம. த. ராம். இராமசாமி செட்டியார்
தென் குடித்திட்டை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரானவர்கள், திருப்பனந்தாள் :

“ தங்கள் ‘மேடைத் தமிழ்’ பிரதி ஒன்று கிடைத்தது. மாணவர்கள் எத்துணை கற்பினும் கல்வியிடமறிந்து உய்த்து உணர்வு இல்லெனின் இல்லாகும். உய்த்து உணர்ந்தும் சொல் வன்மை இல்லையாயின் பயன் இன்றே. அது உண்டேல் பொன்மலர் நாற்றம் உடைத்தற்கு ஒப்பாகும். இதை விளக்குவது மேடைத்தமிழ். மாணவர்கள் படித்துப்பயன் பெறுவார்களாக. ”

பன்னூல் ஆசிரியர்,

உயர்திரு. ஜே. எம். சோமசுந்திரம் பிள்ளை B. A., B. L.

அவர்கள் எழுதியது :

"மேடைத்தமிழ்" : "அறிவியல் உலகம் இதுகாறும் உயர்திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களை ஒரு தலைசிறந்த சிற்ப ஓவியர் என மட்டும் மதித்திருந்தது. பல்லாண்டுகளாக தம் உள்ளத்தே பதிந்துச் சிறந்த சிந்தனைச் செல்வமாகிய "மேடைத்தமிழ்" நூலை அரங்கேற்றிய நாள்தொட்டு, அந்நூலாசிரியரை, கல்லையும் அறிவையும் கலந்து உருவாக்கும் ஒரு சிற்ப வல்லுநர் மட்டுமன்று, சொல்லையும் அறிவையும் ஒருங்கு சேர்த்துச் சித்தரிக்கும் சொல்லின் செல்வரென்றும், சிறந்த தமிழ்க் கலைஞரென்றும் நம் தமிழ்நாடு அறிவதாயிற்று. தமிழ்பேச்சுக்குப் பேரிலக்கணமாக விளங்கும் இந்நூல் தமிழறிஞர் ஒவ்வொருவராலும் போற்றத்தகும் அரியதொரு அறிவுக் களஞ்சியமாகும்.

சொல் வன்மையும் சொல் வளமும் மக்களின் பண்பாடு தோன்றிய காலமுதல், ஒவ்வொரு நாட்டிலும் கையாளப்பட்டுவரும் வலிய கைப்படைகளாம். மேலைநாட்டில் சிசரோ, டெமாஸ்தனீஸ் காலமுதல் வால்டேர், நெப்போலியன், சீசர், பிராங்க்ளின், வாஷிங்டன், லின்கன் வரையும், இன்னும் சமீபகாலத்தில் நமது நாட்டிலே, ராஜா ராம்மோகன்ராய், சுவாமி விவேகாநந்தர், சுரேந்திரநாத்பனர்ஜி, சி. ஆர். தாஸ், மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், டாக்டர் சண்முகம் செட்டியார், சர். ஆ. இராமசுவாமி முதலியார் ஈறாக அவரவர்களது நாவன்மையே அவர்கட்கு உலகில் என்றும் அழியாப்புகழைத் தேடித் தந்துள்ளது. நமது நாட்டுக்கும் பெரும்புகழை நல்கியது. அயர்லாந்து தேசத்தின் சுதந்திரம் டிவாலராவின் ஈடற்ற நாவன்மையின் பயனேயாகும். இன்று இந்தியா பெற்றுள்ள விடுதலைக்கும் சுதந்திரத்திற்கும் தேசத்தொண்டு புரிந்த தன்னலமற்ற இந்திய அரசியல் வாதிகளின் பேச்சுக்களே காரணமாம். உலகப் பெருமன்றத்தில் இந்தியரை ஒப்பற்ற அறிவாளிகளென ஒப்புக்கொள்ளச் செய்ததும் அன்னோரின் நாவன்மையேயாம். ஆகவே மேடைப் பேச்சால் உலகில் எக்காரியத்தையும் சாதிக்கலாமென்பது வெளிப்படை.

இன்று தமிழ்நாடு சுதந்திர இந்தியாவில் முக்கிய இடம் பெற்றுவிட்டது. செந்தமிழ் மொழி அரசியல் மொழியாகும் காலமும் நெருங்கிவிட்டது. நாவலர்கள், சொற்போர் வல்லுநர்களின் தேவை மிகுந்துவிட்டது. எனவே, "மேடைத்தமிழ்" நூலைப் பயின்று நாவன்மையை ஒவ்வொருவரும் பெறுதல் மிக அவசியமாகும்.

இந்நாள் "மேடைத்தமிழ்" நூல் நான்காவது தமிழாக மிளிர்கின்றது. இதுவரையில் வெளிவாராத ஒரு புதுநூல்; கன்னிநூல்;

பேச்சுக்களுக்கு விரிவான தெளிவான இலக்கணம். ஆகவே, இது அரியதொரு இலக்கிய பொக்கிஷமாகும். சொல்வன்மை பெற்று மேம்பாடடைய விரும்பும் தமிழர் ஒவ்வொருவரும் இதனை வாங்கிப் படித்து, பயின்று பயன்பெறுவாராக. ஆர்வத்தோடு இதனைப் படிக்கும் எவரும் ஒரு சிறந்த பேச்சாளர் - ஏன் - நாவன்மை பெற்ற நாவலர் ஆவரென்பதில் ஐயமில்லை.

இந்நூலைத் தந்த திரு. ஆச்சாரியார் அவர்களுக்கு தமிழ்நாடு என்றும் கடமைப்பட்டதாகும்."

"மேடைத்தமிழ்" என்னும் நூல் நம்தமிழ்நாட்டின் பேச்சாளருக்கு ஓர் அரிய வழிகாட்டி. அரங்கிற்கேற்ற அலங்காரங்கள் அடங்கியுள்ளன.

வள்ளுவர் 'அவை யறிதல்' என்னும் அதிகாரத்தில் அவைக்கும் அவையில் பேசுவோருக்கும் சில விதிகளை வகுத்துக் கூறியுள்ளார். பெரியார் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் இயற்றிய இப்புதிய நூலில் பல புதுமைகள் புதைந்து கிடக்கின்றன. மேல்நாட்டு அனுபவங்களையும் கீழ்நாட்டு அனுபவங்களையும் கொண்டு பேச்சின் நுட்பங்களை அணு அணுவாக அலசிப் பார்த்துள்ளார். மேடைமீதேறிப் பேசுவோரின் மூச்சுமுதல் அங்க அசைவுகளையெல்லாம் அளந்து காட்டியுள்ளார்.

ஆடுவதும் பாடுவதும்தான் கலை யென்று போற்றப்பட்டு வந்தன. மேடையேறிப் பேசுவதும் ஓர் கலை எனப் பொதுமக்களை உணரச்செய்த பெருமை நம் 'மேடைத்தமிழ்' நூலாசிரியருக்கே உரியது

இந்நூலால் பேச்சுக்கலை என்பது என்ன? என்பதை அனைவரும் அறியும்படி நம் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் பெரியார் செய்துள்ள சேவை மகத்தானது. ஒவ்வொரு பேச்சாளரும் இந்நூலைப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புகிறோம்."

R. ரங்கநாயகி
ஆசிரியை "விநோதன்" "விநோதினி"

இராவ்பகதூர்
சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B. A., B. L. எழுதியது :

"இது தற்காலத்திற்கு ஏற்றதொரு சிறந்த நூல். 'மேடைப் பேச்சிற்கு மதிப்பு ஏற்படும் இந்நாளில் இந்நூல் வெளிவந்ததே, இதன் ஆசிரியரின் எதிர்கால ஞானத்தை வெளிப்படுத்துகிறது. நமது நாட்டில் சுதந்தரப் போராட்டம் தொடங்கியபோது, பேச்சின் ஆற்றல் அறியப்பட்டது. சுதந்தரம் கிடைத்தவுடன் அவ்வாற்றல் ஏற்றம் அடைகிறது. அவ்வேற்றத்தை நன்ருகப் பயன்படுத்திக்

கொள்ள வேண்டுமானல் பேச்சின் இலக்கணங்களை நன்கு அறிய வேண்டும். அறியாவிட்டால் பயனற்றுப்போவதோடு தீங்கும் ஏற்படும். ஏனெனில், பேச்சும் ஒரு கலை ஆகும். அதனை நன்கு பயின்று நன்முறையில் நடத்தாவிட்டால், கலையின் பயன் எவருக்கும் கிடைக்காது. ஆகவே, ஏனைய கலைகளைப்போல பேச்சுக்கலையையும் பயிலவேண்டும். இக்காலத்தில் எவரும் மேடை ஏறிப் பேசலாம் என்று துணிந்து முன் வருகிறார்கள். இதனுல் ஏற்படும் தீங்கு அளவற்றது. அதனைத் திருத்திப் பக்குவப்படுத்தும் வகையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. நமது நாட்டுப் பொதுமக்களுக்கும் சிறப்பாக தமிழ் படித்தவர்களுக்கும் இந்நூல் ஒரு இலக்கணமாக அமைந்துள்ளது. ஆகவே, தமிழ் மக்கள் இதனைப் போற்றுவதோடு மிக ஊன்றிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

மக்களை மாக்களிலிருந்து வேறுபடுத்துவது ஆறும் அறிவாகும். அவ்வாறும் அறிவு பகுத்தறிவு என்னப்படும். அப்பகுத்தறிவின் மூலக்கருவி தேர்ச்சிபெற்ற மூளையாகும். அம்மூளையை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்டும் பொறி வாய் ஆகும். அவ்வாய்க்குக் கருவிகளாக நிற்பன நாக்கும் தொண்டையும் மூச்சுப்பைகளும் ஆவன. இந்த உறுப்புக்களால் பேச்சு ஏற்படுகிறது. மனிதன் தோன்றினநாள் முதற்கொண்டு பேச்சு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பேச்சுதான் மிகவும் பண்டையக்கலை என்று கூறவேண்டும். மாக்களிலிருந்து மக்களை வேறுபடுத்தும் மற்ெருரு கலை எழுத்து அல்லது படிப்பு. இக்கலையும் மிகப் பழைமையதே. படிப்புத் தொழில் மிகப் பண்டையது என்று கல்வி ஆசிரியர்கள் பெருமையுடன் பேசிக் கொள்கிறுர்கள். ஆனுல் அதைவிட பண்டையது பேச்சு அல்லவா? எழுத்து என்பது பேச்சைக் குறிகளில் பொறிக்கும் ஆற்றல் ஆகும், ஆகவே எழுத்து தோன்றுவதற்கு முந்தியே பேச்சு இருந்தது. இத்தனை பண்டையக் கலையாக இருந்தும் இன்னும் இதன் இலக்கணங்களை நமது நாட்டு மக்கள் அறியாமல் இருக்கிறுர்கள். அக்குறையை நீக்கத்தான் இந்நூல் தோன்றியிருக்கின்றது. இதனை நன்கு பயின்றுல் பேச்சில் தோன்றும் பல குற்றங்கள் நீங்கி குணங்களைக் கை கொள்ளலாம். இந்தப் பேருதவி செய்ததற்கு தமிழ் நாட்டு மக்கள் இதன் ஆசிரியருக்குக் கடமைப்பட்டுள்ளார்கள்.

பேசுங் கலையை எந்தெந்த முறைகளில் பாகுபடுத்தி ஆராய முடியுமோ அந்த முறைகளை எல்லாம் கண்டறிந்து அவைகளை மிகத் தெளிவாக இந்நூலில் புகுத்தியிருக்கிறுர். ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற மேற்கோள்களை அங்கங்கே எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார். முற்காலப் பேச்சாளர்கள், இடைக்காலப் பேச்சாளர்கள், தற்காலப் பேச்சாளர்கள் இவர்களுடைய போக்குகளை எல்லாம் நன்கு அறிந்து அவைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவைகளில் சிறந்தவற்றை ஏற்றுத் கொண்டு அவைகளை நமது நாட்டிற்கு எடுத்துக் காட்டுக்களாக வகுத்

திருக்கிறார். கணக்கற்ற உதாரணங்களைத் தேர்ந்தெடுத்துத் தக்க இடங்களில் பொறித்திருக்கிறார். புதிதாகப் பேச இருக்கும் இளைஞர்களுக்கு இவைகள் மிக்க பயன்படும். இவைகளை நமது நாட்டுப் பெரும் பேச்சாளர்களும் பயன்படுத்திக்கொள்வார்களாக.

பேசுவதற்கு முந்தி தக்க ஆராய்ச்சி வேண்டும். ஆராய்ந்த செய்திகளை தெளிவாகவும் உருக்கமாகவும் கூறவேண்டும். மக்களுக்காகப் பேசுகிறோமே ஒழிய நமக்காக அல்ல என்ற நினைவு வேண்டும். இந்தக் குணங்களை எல்லாம் வெகு நன்றாக ஆண்டிருக்கிறார் ஆசிரியர்.

புகழ் பெற்ற பேச்சாளர்களின் படங்களை நூலில் சேர்த்து அழகுபடுத்தி இருக்கிறார். அப் படங்களைப் பார்த்தேனும் மக்களுக்கு உற்சாகம் பிறக்காதா? பின் சேர்க்கைகளில் பேச்சைப் பற்றிய மூதுரைகள் அகராதி, அட்டவணை முதலியவைகள் சிறப்பைத் தருகின்றன. இந்நூலை எழுதுவதற்கு எடுத்துக் கொண்டிருக்கும் பிரயாசைக்கு அதன் விலை மிகுதியல்ல. இந்நூலைத் தமிழ் மக்கள் அன்போடு போற்றி ஆதரிப்பார்களாக!

"மேடைத்தமிழ்" புத்தகத்தின் பெரும்பாகங்களையும் படித்து இன்பத்தை அநுபவித்தேன். மேடைப்பேச்சு ஒரு அருமையான கலை. மற்றக் கலைகளைப்போலவே இந்தக் கலையையும் முயற்சி எடுத்துக் கற்கவேண்டியது அவசியம். அந்தக் கல்விக்கு ஓர் ஆசிரியனாவது, வழிகாட்டியாவது அவசியம் வேண்டும். தாங்கள் அந்தக் கடமையை எடுத்துக்கொண்டு சிறப்பாகச் செலுத்தியிருக்கிறீர்கள். மேடையிலிருந்து பேச விரும்புவோர் கவனிக்கவேண்டிய எல்லா முக்கிய அம்சங்களையும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றீர்கள்.

தமிழ்நாட்டில் இப்போது பல இளைஞர்கள் அவையில் பேசும் திறமையை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கும், அவையில் பிரகாசிக்க வேண்டுமென்று ஆசைகொண்டவர்களுக்கும் தங்கள் நூல் மிகவும் உபயோகமாக இருக்கும். இந்தப் பணியை திறமையுடன் தாங்கள் செய்ததற்குத் தமிழ்மக்கள் எல்லோரும் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

Sir R. K. சண்முகம் செட்டியார்

தமிழ் நாட்டில் இதுவரை வந்திராத வகையில் ஒரு நூல், இன்றும் என்றும் தமிழ்நாட்டில் உலவவேண்டிய ஒருநூல் 'மேடைத் தமிழா'கும். அதன் ஆசிரியர் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் வாழ்வில் ஓர் பெருந்தொண்டு செய்துள்ளனர்.

தமிழர் இன்றைய நிலையில் கற்றுக்கொள்ள வேண்டுவன பல. எத்தகையோ எண்ணிலடங்கா வகை இருப்பினும் அவற்றுள் பேசக் கற்றுக் கொள்வதும் ஒன்று. சொல் ஆற்றல் உலகை வாழ வைக்கும், வீழவும் வைக்கும். ஆம்! அச் சொல்லாற்றலையும் அவ்வாற்றலைப் பெறும் நிலையினையும் பெற்ற பெருமக்கள் நெறியினையும், அதனால் உற்ற பெரும் பலன்களையும் உணர்த்திக் காட்டுவது இம் மேடைத் தமிழாகும். நம் நாட்டு நாவலர் மட்டுமன்றி எந்நாட்டு நாவலரும் இதில் எடுத்தாளப்படுகின்றனர். அன்னார் ஆர்வ மொழிகள் - ஆக்க மொழிகள் பல பிறசேர்க்கப்பட்டுள்ளன. தமிழகம் இது வரை வரைகாணாத ஒரு நூல் - என்றும் காக்க வேண்டிய பெருநூல் 'மேடைத்தமிழ்'

அ. மு. பரமசிவானந்தம்

ஆசிரியன் 'தமிழ்க்கலை' சென்னை

N. D. சுந்தரவடிவேலு, M. A., L. T.,

எஜுகேஷனல் ஆபீஸர், சென்னை கார்ப்பரேஷன்.

"மேடைத் தமிழ்" நூலைப் படித்து மிக மகிழ்ந்தேன். அது புதிய முயற்சி; செயற்கரிய முயற்சி; மிக நல்ல முயற்சி; பயனுள்ள முயற்சி; வெற்றிகரமான முயற்சி; தமிழ்த்தாய்க்குச் சிறந்த அணிகலன். முதியோர் இளைஞர் அனைவரும் படித்தறிய வேண்டிய நல்ல நூல். தங்கள் தமிழ்த் தொண்டை நந்தமிழ் நாடு பயன்படுத்திக்கொள்வதாக!"

'மேடைத் தமிழ்' என்பதாக ஒரு புத்தகம் அறிஞர் டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களால் இயற்றப்பட்டு அது தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களது முன்னுரை பெற்று வெளியாகி இருக்கிறது.

அதற்கு மேடைத் தமிழ் என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தாலும், பெரிதும் அப்புத்தகத்தின் தத்துவம் பொதுவாக சொற்பொழிவைப் பற்றியதேயாகும். சொற்பொழிவு ஆற்றுவது என்பது ஒரு நல்ல கலை என்பதோடு மக்கள் தொண்டுக்கு இன்றையநாளில் சொற்பொழிவு மிகுதியும் தேவைப்பட்டதும் ஆகும்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு சொற்பொழிவு என்பது மிகவும் அருமையாக இருந்து வந்தது. எங்கு பார்த்தாலும் கவிகளைப் பாடி அதற்குப் பொருள் கூறும் தன்மையில் சொற்பொழிவு வாற்றுவார்கள். அது இரண்டு மடங்கு நேரத்தைக் கொள்ளும். இப்போது கவிகளுக்குப் பொருள் கூறி அதன் வழியாய் ஆற்றும் சொற்பொழிவுகள் மிகவும் சுருங்கிவிட்டன. சொற்பொழிவுகள் பெருத்துவிட்டன. கவிகளை மக்கள் அதிகமாகச் சுவைப்பதில்லை. கவிவாணர்களைப் பற்றியும் மக்கள் அதிகமாக பேசுவதில்லை. கவிக்குப் பொருள் கூறும் தன்மையைப் பற்றியோ பொருள் கூறுவோரின் ஆற்றலைப் பற்றியோகூட மக்கள் அதிகமாகப் பேசுவதில்லை. காரணம் அக்காலத்தில் கவிதான் கல்வியாய் இருந்தது. இன்று கவி அருகிவிட்டது. தேவை இல்லாமலும் ஆகிவிட்டது. கவி பாடுகிறவர்களும் கவிக்குப் பொருள் கூறுபவர்களும் இலக்கண இலக்கியம் கற்றவர்களாக புலமை உள்ளவர்களாக இருக்கவேண்டும். பேச்சாளர்களுக்கு அறிவு அனுபவம் இருந்தாலே போதும். இலக்கண இலக்கியப் புலமை தேவையில்லை. யாரும் பேசலாம். ஆகவே, பேச்சானது பொது அறிவுத்திறன் வேண்டிய ஒரு உயரிய கலையாகும். ஏனெனில் பேச்சாளர்கள் தங்கள் சொற்பொழிவின் மூலம் கேட்பவர்களை தங்கள் வசத்துக்கு இழுக்க வேண்டியவர்கள் ஆவார்கள். இன்று பேச்சாளர்கள் ஏராளமாக இருந்தாலும் தங்கள் பேச்சினால் கேட்பார்களை தன் வசப்படுத்தி தன் நிலைக்கு இழுத்துக்கொள்ளுந் திறமைபடைத்தவர்கள் மிகச் சிலர்தான் இருப்பார்கள். ஆதலால் கவிக்கலையைவிட கவிக்குப் பொருளுரைக்கும் கலையைவிட பேச்சுக்கலையே சிறந்ததாகும்.

இப்படிப்பட்ட கலைக்கு இலக்கண இலக்கிய நூலாக அறிஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களது மேடைத்தமிழ் என்னும் புத்தகம் நல்ல அளவுக்கு அமைந்திருக்கிறது.

அறிஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் நாடு போற்றும் ஒரு சிறந்த சிற்பக் கலைவாணர் ஆவார். அவர் சிற்பக் கலைவாணர் மாத்திரமல்லாமல் பேச்சுக்கலையையும் அறிந்த பேச்சுக் கலைவாணரும் ஆவார் என்பதை இப்புத்தகம் விளக்குகிறது. இதில் பலதரப்பட்ட பேச்சாளர்களைக் குறிப்பிட்டிருப்பதோடு அவர்களது பேச்சின் தன்மையையும் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. பேச்சின் பொதுத் தத்துவத்தையும் அது இருக்கவேண்டிய முறைபற்றியும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இப்புத்தகத்திற்குப் பெயர் ‘மேடைத் தமிழ்’ என்று கொடுக்கப்பட்டிருந்தாலும் இது மேடைக்கு மாத்திரம் அல்லாமல் எல்லா

இடத்திற்குமாகவும், தமிழுக்கு மாத்திரமல்லாமல் எல்லா மொழிக்குமாகவும் பொருத்தமுடையதாகும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால் ஒவ்வொரு பேச்சாளரும் இப்புத்தகத்தை ஒரு முறைக்கு இருமுறை படித்துப்பார்த்து தங்கள் பேச்சை பேச்சு இலக்கணத்துக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்துக்கு ஏற்ற ஒரு பேச்சு விஞ்ஞானப் புத்தகம் இது. அதாவது Science of Speech என்றே சொல்லலாம்.

இப்புத்தகத்தின் தேவையைக் கண்டுபிடித்து இந்தத் தத்துவத்தில் முதல் முதலாக இதைத் தமிழ் நாட்டுக்கு ஆக்கித் தந்த அறிஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் ஏற்றவும் பாராட்டுதற்குரியவராவார்கள்.

ஈ. வே. ராமசாமி.

A. I. R. Review Broadcast By

Dr. M. Varadharajan, M. O. L., Ph. D.

"மேடைத்தமிழ்" என்னும் ஒரு நூல் புதிய துறையில் எழுதப்பட்டு வெளிவந்துள்ள அரிய நூல் ஆகும். தமிழிலக்கியத்திற்குப் புதிய அணிகலன் என்று அதைக் கூறவேண்டும். கட்டடச் சிற்ப ஓவியத்திலும் சமுகத் தொண்டிலும் புகழ்பெற்று விளங்கும் அறிஞர் திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் பல ஆண்டுகளாக முயன்று ஆக்கித் தந்துள்ள இந்த நூல் ஏறக்குறைய 450 பக்கம் கொண்டது; பத்து ரூபாய் விலை உடையது; பிழையில்லாத பதிப்பு.

இது பேச்சுக் கலையைப்பற்றித் தமிழில் விரிவாக ஆராய்ந்து எழுதப்பட்ட முதல் நூல் ஆகையால், இணையற்ற சிறப்போடு விளங்க வல்லதாகும். "இற்றைஞான்று மேடைத்தமிழ் என்றொரு நூல் உருக்கொண்டுள்ளது. இம்முடிமிலைந்த ஒரு நூலை இதுகாறும் நீங்கள் கண்டதுண்டா? கேட்டதுண்டா? இது புதுமுறையில் அமைந்த ஒரு நூல்; தனி நூல்; கன்னி நூல்" என்று அணிந்துரை எழுதிய பெரியாருடன் நாமும் சேர்ந்து போற்றத் தக்கதாக உள்ளது. அணிந்துரை எழுதிய, தமிழ்ச் சான்றோர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஒரு புரட்சி செய்திருக்கின்றார். நூலுக்கு முகவுரை எழுதிய எவரும் சொற்பொழிவுபோல் எழுதியது காணோம். "மேடைத் தமிழ்" நூலுக்குரிய அணிந்துரை மேடையிலிருந்து பேசப்படும் தமிழாகவே, சொற்பொழிவாகவே உள்ளது. "தோழர்களே உங்கள் முன்னிலையில் யான் நிற்கிறேன்" என்று தொடங்கியுள்ளது. இத்தகைய அணிந்துரையை இதுவரையில் எவரேனும் கண்டதுண்டா?

கேட்டதுண்டா? என்றே வியப்படையவேண்டியதாக உள்ளது. இந்த அணிந்துரை உண்மையாகவே நூலுக்கு அணி செய்து சிறப்பிக்கின்றது.

நூலின் ஆசிரியர் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் பேசும் முறையை பற்றி முதலில் 144 பக்கங்களில் விளக்குகின்றார். அடுத்த பகுதியில் பேச்சுத் திறனை வளர்த்தற்குரிய நல்வழிகளை எடுத்துரைக்கின்றார். பேச்சுக்கலையைப் பற்றி இந் நூலில் கூறப்படாத பொருள் இல்லை. எல்லாவகையாலும் ஆராய்ந்து எல்லாவற்றையும் விளக்கிவிட்டிருக்கின்றார். விட்ட குறை என ஒன்றும் காண்பதற்கு இடந்தரவில்லை. அவையடக்கம் முதலாக பண்டைய முறையில் விளக்கங்களையும் இங்குக் காணலாம். எடுத்தல் தொடுத்தல் முடித்தல் முதலான புதுவகைகளையும் காணலாம். உவமைக் கதைகளைக் கூறிச் சொற்பொழிவைச் சுவைபடச் செய்தல் முதலாகப் புள்ளி விவரங்களைக் கூறி வியப்படையச் செய்தல் வரையில், சொற்போர் நடத்தி வெற்றி பெறுதல் முதல் பாராளுமன்றத்தில் திறம்படப் பேசுதல் வரையில், அவைத்தலைவர் நன்றி கூறுவோர் முதலானவரின் கடமை முதல் பேச்சுப் போட்டியில் நடுவர்நிலைமை வரையில் எல்லாம் எடுத்துக் கூறப்படுகின்றன. பேச்சில் ஏற்படத்தகாத சோர்வுகள் இத்தனை, செய்யத் தகாத சேட்டைகள் இவை என்பவற்றை யெல்லாம் ஆசிரியர் நயமுற விளக்குகின்றார்.

மேடைத் தமிழை வளர்த்துப் பேச்சுக்கலையில் முன்னேறுவதற்கு வேண்டிய வழிவகைகளைக் கூறுவதில் ஆசிரியர் நல்ல உதவி புரிந்திருக்கின்றார். மூளை, இதயம் முதலானவற்றின் இயல்புகளை ஆராய்ந்து விளங்குவதோடு, அவற்றை உரம்பெறக் காப்பாற்றும் வழிகளையும் பிராணாயாமத்தின் நன்மைகளையும் கூறியுள்ளார். பேச்சுக்கலை ஆயுளைக் குறைக்கும் என்றும் கொள்கையை மறுத்து, நல்ல பேச்சு முறை ஆயுள் நீடிப்புக்குத் துணை செய்யும் என்றும் உண்மையைச் சான்றுகாட்டி உணர்த்துகின்றார். நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ள எளிய வழிகளைக் குறிப்பிட்டுள்ளார். ஒலி பெருக்கி வேண்டுமா, வேண்டாமா, அதை எந்த அளவில் பயன்படுத்தவேண்டும் என்பனவற்றையும் ஆசிரியர் விடவில்லை. இவை போன்ற குறிப்புக்கள், பேச்சுக்கலை பற்றிய வேறு எந்த நூலிலும் இதுவரையிலும் காண முடியாதவை. எதையும் தக்க காரணங்கள் காட்டி விளக்குவதால், நூலைப் படிப்பவர்க்கு ஆர்வம் பெருகுகின்றது.

பேச்சுக்கலையில் முன்னேற விரும்புகின்றவர்களுக்குக் குறைகளை எடுத்துக் கூறி, அச்சுறுத்தும் வகையில் நூல் எழுதுவது எளிது. ஆனால் குறைகளைத் திருத்திக்கொண்டு தன்னம்பிக்கையோடு முன்னேறும் வகையில் ஊக்க மூட்டி எழுதுகின்ற போக்கையே இந்த நூலில் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக, மேடையில்

பேசத் தொடங்கும்போது நடுங்கக் கூடாது என்று எழுதிவிட்டுச் செல்லலாம். ஆனால் ஆசிரியரின் தொண்டு மனம் அவ்வாறு செய்ய வில்லை. மகாத்மா காந்தியின் நடுக்கத்தையும் சர். ஆர். கே. ஷண் முகம் செட்டியாரின் தளர்ச்சியையும் ஆங்கில நாவலர் கிளாட்ஸ்ட னுடைய நடுக்கத்தையும் எடுத்துரைத்து ஊக்கமூட்டுகின்றார். குறை பாடு உடையவர்களைக் கடியும்போதும் நாகரிகமாக இலக்கியச் சுவை யோடு எழுதுகின்றார். போலிப் பேச்சாளர்களைக் குறிப்பிடும்போது, அவர்கள் பொல்லாச் சிறகை விரித்து ஆடுவதாகக் கூறுகின்றார். சில குறைகளை எடுத்துரைக்கும்போது நகைச்சுவையும் உள்ளது. பகை வரின் அம்பு குண்டு முதலியவைகளுக்கு அஞ்சி ஒளிவதுபோல் நாற்காலி மேசைகளுக்குப் பின்னால் கழுத்தளவு மார்பளவு மறைந்து நின்று பேசுதலை மேடைப் பேச்சாளர் தவிர்த்தல் வேண்டும் என்றும் சுவை தோன்றக் குறிப்பிடுகின்றார்.

மூன்றும் பகுதியில் அறிஞர் பலருடைய முது மொழிகளும் மேனாட்டு, இந்திய நாட்டு நாவலர்களின் சிறந்த சொற்பொழிவுகளும் இரண்டு அகராதிகளும் சொற் கோவைகளும் உள்ளன. இவ்வாறு அமைந்த ஐந்து சேர்க்கைகளும் பயனுள்ளவையாக விளங்குகின்றன.

கிளாட்ஸ்ட்டன் போன்ற அறிஞர்களின் அனுபவக் கருத்துக்களை ஆசிரியர் தக்க இடங்களில் சான்றுகளாகவும் விளக்கங்களாகவும் தந்துள்ளார். அவற்றை ஒழுங்கு படுத்திக் காட்டும் முறை போற் றத் தக்கது. ஆயினும், ஆசிரியர் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் தாமாகவே பெரிதும் முயன்று உணர்ந்து எழுதியுள்ள கருத்துக்கள் மிகுதியாக உள்ளன. இத்தகைய கருததுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால், அவை ஆங்கிலம் அறிந்த பலருக்கும், புதுமை யாக விளங்கும். புதிய கருத்துக்கள் பலவற்றைச் சிறப்பாக இரண் டாம் பகுதியில் காணலாம்.

முன்னமே எண்ணிக் குறித்துக்கொண்டு பயிலும் பயிற்சி மேடைத்தமிழுக்கு வேண்டும் என வற்புறுத்தும் பகுதியில், வேறு எவர்க்கும் புலப்படாத குறிப்பை ஆசிரியர் தேடிச் சேர்ப்பதில் வல் லவர் என்பது நன்றாகத் தெரிகின்றது காந்தியடிகள் ஆசியமக்கள் கூட்டுறவு மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய பேச்சை எல் லோரும் அரசியல் கண்மட்டுங்கொண்டு படித்திருக்கின்றோம். ஆனால் இந்த நூலின் ஆசிரியர் அதைப் படித்தபோது, தாம் எழுதிய நூலில் எதற்கு விளக்கமாக அமைக்கலாம் என்று நோக்கத்தோடு படித்திருந் தால்தான், இந்தக் கருத்திற்குப் பயன்படுத்தியிருக்க முடியும். இவ்வாறு பல ஆண்டுகளாக உழைத்துச் சேர்த்துள்ள குறிப்புகள் எண்ணற்றவை இந்த நூலில் உள்ளன.

ஆங்கில நாவலர்களின் சொற்பொழிவுகளை மொழி பெயர்த் துள்ள பகுதிகளிலும் அருமைப்பாடு விளங்குகின்றது. மார்க்

ஆண்டனி, சுரேந்திரநாத் பானர்ஜி முதலானவர்களின் சொற்பொழிவுகளைப் படிக்கும்போது மொழி பெயர்ப்பு என்ற எண்ணமே எழவில்லை. அவ்வளவு நல்ல தமிழ் நடையில் மொழி பெயர்த்துள்ளார். அவர்கள் தமிழ் மொழியிலேயே பேசினார்களோ என்று எண்ணும்படியாகச் செய்துள்ளார்; இதுவே நல்ல மொழி பெயர்ப்பின் தன்மையாகும்.

இந்த நூல் மேடைத்தமிழில் ஆர்வம் வளர்ந்துவரும் இக்காலத்திற்கு மிகப் பயன்படுவதாகும். பேச்சுக்கலையில் கல்லூரி மாணவர்களின் ஊக்கம் வளர்ந்துவரும் இந்நாளில், இதன் பகுதிகள் கல்லூரிகளில் பாட புத்தகமாக அமையத் தகுந்தவைகள்."

❀

"தமிழ்நாட்டில் சிலகாலமாக நல்ல புத்தகங்கள் வெளிவருவதை காணோம். போட்டியிட்டுக்கொண்டு நல்ல நல்ல புத்தகங்களை வெளியிட்டுவந்த புகழ்பெற்ற பிரசுராலயங்கள் இன்று இருந்தவிடம் தெரியாமல் இருக்கின்றன. வீண் விவாதங்களை வளர்க்கும் துண்டுப் பிரசுரங்களையும் சின்னஞ்சிறு சமயவேதாந்த நூல்களையுமே நாம் பெருவாரியாகக் காண்கிறோம். இந்த மந்த நிலையிலும் அத்திப் பூத்தாற்போல ஓரிரண்டு நல்ல நூல்களும் வெளிவந்திருப்பது நமக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இந்நூல்களில் ஒன்று திருவாளர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்கள் எழுதியுள்ள மேடைத் தமிழ்.

ஒரு நாள் பல குப்பைப் புத்தகங்களுடன் இம்மேடைத் தமிழும் நம் பார்வைக்கு வந்தது. ஏது, தோற்றத்திலும் பருமனிலும் பெரிதாயிருக்கிறதே என்று வியப்படைந்தோம். தமிழிலாவது மேடையாவது? இது ஆங்கிலப் புத்தகம் ஏதாவதொன்றின் காப்பி போலும் என்று எண்ணினோம். சொல்லின் செல்வரான திருவாளர் திரு. வி. க. அவர்களின் அணிந்துரையைப் படித்தோம். திரு. வி. க. பரம சாது. பல நூல்களில் அவர் எழுதியுள்ள அணிந்துரை நாம் படிப்பதற்குரியன. தம் பார்வைக்கு வந்த புத்தகங்களை மிகுந்த அனுதாபத்துடனும் பார்த்து கூடிய வரையில் புகழ்ந்தே பேசுவார். நூல் எப்படியோ என ஐயுற்றோம். புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும் இவ் ஐயங்கள் யாவும் பறந்தோடின. நூலின் இனிய தமிழ் நடையும் விஷயங்களின் சுவையும் நம் மனத்தை ஈர்த்தன. ஒரே மூச்சில் 416 பக்கங்களையும் படித்தோம். இது ஒரு பெருநூல். அப்பட்டமான நூல்; என்றென்றும் உபயோகத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரிய நூல்; தமிழில் இத்தகைய நூல் வெகுகாலமாக வந்திலது என்ற இன்றியமையாத முடிவுக்கு வந்தோம். திருவாளர் திரு. வி. க. கூறுவதைப்போல இது புது முறையில் சமைந்த ஒரு நூல்; தனி நூல்; கன்னி நூல்.

எடுத்துக்கொண்ட விஷயத்தை மிக விரிவாகவும் முறையாகவும் விளக்கும் இந்நூலில் இரண்டு பகுதிகளும் ஐந்து சேர்க்கைகளும் காண்கின்றன. 23 அத்தியாயங்கள் கொண்ட முதல் பகுதியின் பேச்சின் இலக்கியமும் 21 அத்தியாயங்கள்கொண்ட இரண்டாம் பகுதியில் பேச்சின் தத்துவமும் மிக அழகாக விவரிக்கப்படுகின்றன. முதல் சேர்க்கையில் முதுமொழிக்கோவை என்ற தலைப்பில் பல நாவலரின் கருத்துக்கள் தரப்படுகின்றன. பின் மூன்று சேர்க்கைகளில் மேனாட்டு நாவலர் சிலரின் மாதிரிச் சொற்பொழிவுகளும் இந்திய நாவலரின் ஆங்கிலச் சொற்பெருக்குகளும் தமிழ்நாட்டு நாவலரின் தனித் தமிழ் விரிவுரைகளும் காண்கின்றன; ஐந்தாம் சேர்க்கையில் மேடைத்தமிழ் அகராதியும். பிரதிப்பதங்களும் எதிரிடைச் சொற்களும் சிறப்புப் பெயரகராதியும் உள்ளன.

பேச்சாளரின் இலக்கணம், பேச்சைத் தயாரித்தல் பேச்சை எடுத்தல் தொடுத்தல் முடித்தல் சொற்போர், அவைத் தலைமை பேச்சுக்கலை பாராளுமன்றத்தின் விதி வாய்ப்பாடுகள் இவையும் தமிழ்ப் பேச்சின் உயர்வு பேச்சுப் பொருத்தம் பேச்சலங்காரம் மேடைப்பேச்சின் தத்துவம் பேச்சுச்சுவை முதலிய அத்தியாயங்களும் பல விஷயங்களை நமக்குச் சுவையுடன் கூறுகின்றன. இவற்றில் நம் இந்திய நாட்டில் புகழ்பெற்ற பேச்சாளர் பிற நாடுகளில் புகழ் பெற்ற சொற்செல்வர் ஆகியோரின் அனுபவங்கள் பேச்சுத்திறமைகள் முதலிய பல விஷயங்களை அறிகிறோம். நம் தமிழ் நாட்டில் பேச்சில் சிறப்புற்ற திரு. ஞானியார், மறைமலையடிகள், திரு. வி. க., ஈ. வெ. ரா., நாயுடு, சாஸ்திரி, அண்ணாத்துரை, சத்தியமூர்த்தி ஆதலியோரைப் பற்றியும் பல சுவையுள்ள விஷயங்களை அறிகிறோம். முசிரியரும் சிறந்தபேச்சாளர். அவர் தகப்பனாரும் சிறந்தபேச்சாளரே. மேடைப்பேச்சில் அனுபவம் வாய்ந்த இத்தகையார் தாம் கேட்டது கண்டது படித்தது அனுபவித்தது ஆகிய பல விஷயங்களையும் இந் நூலில் பயன்படுத்தி யிருக்கிறார். இவரது பெரு முயற்சியின் பலனே இச் சிறந்த நூல்.

இந்நூலை வரவேற்கிறோம். இது ஒவ்வொரு தமிழனிடமும் இருக்கவேண்டியது: ஒவ்வொரு மாணவனிடம் கலாசாலையிலும் இருக்கவேண்டியது."

—சுதேசமித்திரன்

❁

"மேடைத் தமிழ்" அரியதொரு சாதனை. தமிழ்த் தாய்ப் பெருமிதங் கொள்ளச் செய்யும் மிகச் சிறந்த நூல். தமிழ் மக்களுக்கு கிடைத்தற்கரியதொரு கலைப் பொக்கிஷம். நிகரற்று விளங்கும் பெரும் நூலொன்றை இரவு பகலாக எழுதி, நமக்கு அளித்துள்ள

ஸ்ரீ தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியாருக்கு இன்றைத் தமிழ் மக்களும், வருங்கால இளைஞர்களும் கடமைப் பட்டவர் ஆவார்கள்.

பொது வாழ்க்கையில், குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார கல்வித் துறைகளில், மக்களை விழிப்படையவும், நாடு முன்னேறவும் செய்ய, வாக்குவன்மை இன்றியமையாத, அத்தியாவசியமான ஒரு கலை என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பொதுக் கூட்டங்களிலும், சட்ட சபைகளிலும் மற்றும் பல இடங்களிலும் ஏராளமான பேர் பேசுகின்றனர். ஆனால், பலர் பேசும் இடங்களில் பேசவேண்டிய விஷயங்களையே பேசுகின்றாரா என்று நோக்கினால் இல்லையென்றேதான் வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. பேசுவதென்பது ஒரு அருங்கலை. இந்தக் கலை பல நாடுகளில் நன்கு வளர்ந்திருக்கிறது. இக்கலை இன்றைத் தமிழ்நாட்டில் வளம் பெற்றிருக்கவில்லை. இவ்வரும் பெருங் கலையை வளர்ப்பதற்கு "மேடைத் தமிழ்" பெரிதும் உதவும்.

இந்நூல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து சேர்க்கைகளுடன் விளங்குகிறது. முதல் பகுதி பேச்சு இலக்கியத்தைப் பற்றியும் இரண்டாவது பகுதி பேச்சுத் தத்துவத்தைப் பற்றியும் விளக்குகின்றன. எப்படிப் பேச ஆரம்பிப்பது, பேச்சை எப்படி முடிப்பது, எப்படி வாதம் செய்வது என்பன போன்ற விஷயங்களை ஆசிரியர் அற்புதமான முறையில், பிரபல அரசியல் வாதிகள், ராஜதந்திரிகள், பேரறிஞர்கள் ஆகியோரின் பிரசங்கங்களிலிருந்து மேற்கோள்களுடன் மிக்க அழகாக விளக்கியிருக்கிறார். உலகப் பிரசித்தி பெற்ற பேச்சாளர்களின் சொற்பொழிவுகளும், அவர்களில் பலருடைய உருவப் படங்களும் இப்பெரிய நூலைச் சிறப்பித்திருக்கின்றன.

இந்நூலை, உலகப் பிரசித்தி பெற்ற பேச்சாளர்களில் ஒருவர் என்று போற்றப்பட்டு வந்த காலஞ்சென்ற மகாகனம். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் பாராட்டியிருப்பதும், தமிழ்ச்செல்வரான திரு வி. க. இதற்கு அணிந்துரை அளித்திருப்பதும் இந்நூல் தமிழ் மக்களுக்குக் கிடைத்தற்கரிய பொக்கிஷம் என்பதற்குப் போதிய சான்றாகும்."

"மேடைத் தமிழை" நம் அரசாங்கத்தார் கல்லூரிகளிலும், ஹைஸ்கூல்களிலும் பாடமாக வைக்கும்படிச் செய்யவேண்டுமென்று யோசனை கூறுகிறோம்."

"தினசரி" மடல்

"மேடைத் தமிழ்! தமிழுலகிலே இதுகாறும் நடமாடாத நூல். பல நாட்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டிய நூல்—பலராலும்

எதிர்பார்க்கப்பட்ட நூல். - தமிழறிஞர்களின் உள்ளங்களிலே கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த வேணவாவினைத் தணித்து மகிழ்ச்சியினை மலரவைக்கும் பெற்றிவாய்ந்த இந்த அரியபெரிய நூலை உருவாக்கித் தரும் சீரிய பணியினை மேற்கொண்டு கடமையை ஆற்றித்தந்த அன்பர் டி. எம். தெய்வசிகாமணி அவர்களைத் தமிழுலகம் பாராட்டாமலிருக்க இயலாது. இந்நூலுக்குச் சிறந்த தமிழறிஞரான திரு. வி. க. அவர்கள் தம் அழகிய - தெளிந்த - உயிரோட்டமுள்ள செந்தமிழ் நடையால் அணிந்துரை யொன்று வழங்கியுள்ளார்கள். மேடைமீது ஏறி நிற்கும் தமிழனும்-ஏறிநிற்க விரும்பும் தமிழனும் கைக்கொள்ள வேண்டிய முறைகளையும், கேட்கும் மக்களைத் தன்பால் பிணிக்கும் வழிகளையும், கேட்காத மக்களும் விரும்பிக் கேட்க வேண்டும் கேட்க வேண்டும் என்னும் ஆவலால் உந்தப்பட்டுத் தன் மேடையருகே வந்துமொய்க்கும் படியாகச் செய்யும் வகைகளையும் இந்நூலாசிரியர் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார். சுருங்கக் கூறின் தமிழ் மேடைப் பேச்சின் இலக்கணம் முழுவதையும் வரையறுத்துக் கூறிவிட்டார் என்றே கூறவேண்டும். இன்பத்தேன் பிலிற்றும் செந்தமிழ்ச் சொற்கள், களிநடனம் புரிந்து, எழில் நடை போட்டு, இறுமாந்து செல்கின்றன. தமிழ்ச் சொல்லேருழவர் பலரின் தீந்தமிழ்ச் சொற்பொழிவுகளை மேற்கோள்களாக எடுத்துக் காட்டி, பேச்சுத் திறமைகளை ஆங்காங்கு புலப்படுத்திச் செல்கிறார். யாரும் மேடை ஏறி, சொன்மாரி பொழிந்து, நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்று, வெற்றி கொண்டு, வீறு பெற்று எழுந்து, தோலாமொழி நாவலர்களாகத் தாமும் திகழவேண்டும் என்றதோர் உள்ள நெகிழ்ச்சியைக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை."

—திராவிடநாடு

"இயற்றமிழ், இசைத் தமிழ், நாடக தமிழெனு முத்தமிழ், தமிழ் மக்களை மகிழ்விக்கும் இலக்கியங்களாக யாங்கணும் மிளிர்வன. தொன்றுதொட்டே இம் முப்பெரும் இலக்கியங்களுள் தமிழருள்ளத்தில் தேனருவிகளாகப் பாய்ந்து இன்பூட்டி நிற்பன. தேனுடன் தித்திக்கும் தீங்கனி யொன்றைப் பெரியார் தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் நந்தமிழ் மக்களுக்கு அழகாக அமைத்துத் தந்திருக்கின்றார். அது முப்பெருந் தமிழ் களினின்றும் தனித்து நான்காவது நனியுறு தமிழாகத் தோற்றமளிக்கிறது. இணையற்றவொரு இலக்கியப் பிரிவாக இலங்குகிறது. இதுவே மேடைத் தமிழ். இது புது முறையில் அமைந்ததோர் நூல். இந்நாட்டில் இதுவரை யில்லாததொரு அரிய நன்முயற்சியின் விளைவு இக்களஞ்சியம்.

இந் நூலில் இரண்டு பகுதிகளும் ஐந்து சேர்க்கைகளும் அடங்கியுள்ளன. முற்பகுதி பேச்சிலக்கியத்தையும் இரண்டாம் பகுதி பேச்சு தத்துவத்தையும் விரிவுரை செய்கின்றன. பேச்சிலக்கிய வாயில் வழி, பேச்சு வன்மை, பேச்சாளர் இலக்கணம், பேசுமுபாயம், பேச்சுக் கலை, சுருக்கெழுத்துபயோகம் முதலியன பிறக்கின்றன. இரண்டாவதாக தத்துவ பீடத்தின்மீது தமிழ்ப் பேச்சின் உயர்வு பேச்சலங்காரம், ஒலி பெருக்கிவின் உதவி, பொன்னுள் உதயம் முதலியன அலங்கரிக்கப்படுகின்றன. சேர்க்கைகளில் பல நாவலர்களின் கருத்துக்களும் மாதிரிச் சொற்பொழிவுகளும், மேடைத் தமிழகராதி, சிறப்புப் பெயரகராதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நூலாசிரியர் தமிழ் நாட்டின் அரிய பேச்சாளர்கள் ஏனைய சொல் விற்பனர்கள் இவர்களுடைய உருவப் படங்கள் 26-ஐ இந்த நூலில் இணைத்திருக்கிறார். 49 சூசிகைகளையும், எண்ணற்ற உட்பிரிவுகளையுமுடைய இந்த புத்தகம் நல்ல காகிதத்தில் எளிதில் வாசிக்கக் கூடிய அளவு எழுத்துக்களால் அழகாக அச்சிடப் பெற்றிருக்கிறது.

இவ்வரிய நூலுக்கு அணிந்துரை சூட்டியிருக்கும் அரும் பெருந் தமிழ்ச் செல்வர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், "மேடைத் தமிழ்" என்ற நூலை ஒரு கலைக் கோயிலாகக் காண்கிறார். அக்கோயிலில் பலதிற நாவலர்கள் வீற்றிருக்கின்றன ரென்றும், கலைஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அந்நாவலர்களை யணுகி உறவாடி, அவரவரேயாகிறாரென்றும், நாவலரனைவரும் ஒரு தெய்வசிகாமணி யாகின்றன ரென்றும் திரு. வி. க. அந்நூலின் நுட்பத்தை வியந்து உரைக்கின்றார். மேலும் "மேடைத் தமிழ்" காலத்துக்குரிய ஒரு அறிவுக் கருவி. இது நாட்டை வளம்படுத்தும்; வாக்காளரைப் பண்படுத்தும்; சட்டசபையைச் சீர் செய்யும்; நல்லமைச்சை நிறுவும்" என்று அப்பெரியார் கூறுகின்றார். இந்நூலின் சிறப்பை இன்னும் எப்படி எடுத்துரைப்பது?

நூலை இயற்றிய ஸ்ரீ தி. மு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் விசுவகர்ம குல சிரேஷ்டர். தமிழ்மொழியில் அன்னவருக்கிருக்கும் அன்பும் ஆர்வமுந் தூண்ட இந் நல்லிலக்கியத் தொண்டில் அவர் ஈடுபட்டார். தம் அனுபவத்தையும், பல அரிய நூல்களை ஆராய்ந்து திரட்டிய அறிவையுங்கொண்டு இவ்வுயர்ந்த நூலை அவர் தொகுத்துள்ளார். பிரசங்க மேடைமீது நின்று பேசுவோர், பேச விரும்புவோர் ஒவ்வொருவரும் இந்நூலை ஊன்றிக் கற்றல் கடனும்.

சிற்பத் தொழிலில் வல்லுனரான ஸ்ரீ. ஆச்சாரியார், தமிழ் மொழியிடத்துத் தமக்குள்ள ஆர்வத்தால் மேடைப் பேச்சு முறையை ஒரு நிர்மல வடிவாகவே நிர்மாணித்திருக்கிறார். மேடைமீது பேசப் புகுவோர், கவனிக்க வேண்டிய விதிகள், பயிற்சி செய்துகொள்ள வேண்டிய பண்புகள், உடல் நலம் பேணல், மித

ஊண் கொள்ளல், தகும் உடையணிதல், உள்ளத் தூய்மை வளர்த்தல் முதலிய ஒவ்வொரு உட்கூற்றையும் தெளிவுபடத் தீட்டியுள்ளார். இப்பெரும் நூலைக்கற்று, இதில் கூறப்படுந் துறைகளில் முனைந்து பழகுவோர் காலக் கிரமத்தே மேடைமீது ஒழுங்கு முறையில் பேசும் ஆற்றலையடைவர் என்பது திண்ணம்.

இத்தகைய தன்னிகரில்லாத் தனிப் பெரும் நூலொன்றை நம் தமிழ்நாட்டுக் கீந்த தகைஞருக்கு தமிழ் மக்கள் கடமைப்பட்டவர்களாவோம். மேடைத் தமிழை நாடு முழுவதும் பரப்ப முயல்வதே அப்பெரியாருக்கு நாம் செய்யும் கைமாறாகும். தமிழன் வாழ் வீடு ஒவ்வொன்றிலும் இந் நூலின் ஒரு பிரதி இருக்க வேண்டியது அவசியமான தாகும்."

—காண்டிபம்

"'மேடைத்தமிழ்' ஆசிரியர் என்ன எழுதியிருக்கின்றாரோ என முதலில் சந்தேகித்தோம். 'மேடைத் தமிழ்' என்பது திண்ணைப் பேச்சு தானோ என்று ஐயமும் கொண்டோம். பிறகு படிக்கத் துணிந்ததும் நாம் நினைத்த சந்தேகங்கள் எல்லாம் மாயமாய் மறைந்துபோயின. மேடைத் தமிழ் என்பது மேடைப் பிரசங்க ஆசிரியன் எனத்தகும். பிரசங்க முறைகள், வகைகள், அதிலுள்ள வனப்புகள், வாய்ப்புக்கள், தகுதிகள், தன்மைகள் எத்தகையனவாய் உள்ளன என்பதை ஆசிரியர் பலவகையாலும் எடுத்துக் காட்டி இருக்கின்றார். இத்தகைய புத்தகம் பாமர மக்களுக்கு என்பது ஒரு பக்கல் கிடக்க, படித்த மேதாவிகளுக்கும், பண்புள்ள போராசிரியர்களுக்கும், பெரிதும் பிரயோஜனம் தரத்தக்க வகையில் விஷயம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதே எமது அபிப்பிராயம். இப்புத்தகத்தின் அருமையையும் பெருமையையும், கௌரவத்தையும் எடுத்துக்காட்ட பண்டிதசிகாமணி திரு. வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் சுமார் இருபது பக்கங்கள் வரை அணிந்துரை எழுதி யிருப்பதே போதுமான நற்சான்றாகும். சுருங்கக்கூறின் இப்புத்தகத்தைப் பற்றி அதிகம் அதிகம் உண்மையை எடுத்துக் கூறிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. கற்றவரும், மற்றவரும் தங்கள் தங்கள் அறிவையும் ஞானத்தையும் அதிகப்படுத்திக் கொள்ள இப்புனித நூல் ஒன்றை வாங்கிப் படித்தல் மிக அவசியம் என்று கூறுகின்றோம். இடை இடையே பல பெரியார்களின் பேச்சுக்களும் அவர்களது உருவப்படங்களும் அழகிய முறையில் சேர்த்து இருப்பது புத்தகத்தை மிகவும் அழகுபடுத்திக் கொண்டிருக்கிறது. கவைகுதவா சாரமற்ற ருசி யில்லா புத்தகங்கள் பல வெளியிடுவதைக் காட்டிலும் மேடைத் தமிழ்போன்ற அறிவு விருந்துக்கான சாதன

நூல்களை வெளியிடுவது சாலவும் சிறந்தது என ஆசிரியர்களை கேட்டு கொள்கிறேம்."

—நூருல் இஸ்லாம்

"மாணவை மண்ணுறுத்தும் செல்வமும் உண்டு சிலருக்கு" என்ருர் குமாரகுருபர அடிகள். பலர்க்கு என்று சொல்வது மிகையாகாது என்னும்படி அச் செல்வத்தை அள்ளிவீசி அவ்வவர்களையும் தன்வயமாக்கும் தகுதி இம்மேடைத் தமிழிடத்தில் இருக்கின்றது. இந் நூல் 128, 129ம் பக்கங்களில் தரப்பட்டுள்ள 'ஒன்பது நன்மணிகளும் பத்து நயமொழிகளும்' என்ற பகுதி நூலின் உயிர் நாடியாக விளங்குகிறது. மேனுட்டு நாவலர், இந்திய நாவலர், தமிழ் நாட்டு நாவலர் ஆகியோர்களின் கருத்துக்களும், தமிழ்ச் சொற்பொழிவுகளும் ஆங்கிலச் சொற்பொழிவுகளுள்ளே மொழிபெயர்க்கப்பட்டனவாகிய சிலவும் மாதிரிக்காக இந்நூலிறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய இந்நூல் திரு. வி. க. அவர்கள் அணிந்துரையுடன் தமிழ்மகளின் அணிகலமாக விளங்குகிறது. பல் பேராசிரியர்களின் திருவுருவப்படங்களும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன."

—ஞானசம்பந்தம்

"பேச்சு என்பது ஒரு கலை; அருமையான கலை. உலகில் பல நாடுகள் பேச்சுக் கலையைப் பெரிதும் போற்றி வளர்த்திருக்கின்றன. தமிழ் நாட்டில் இப்போது பேச்சுக்குப் பஞ்சம் இல்லை. எங்கே பார்த்தாலும் ஒரே பேச்சாக இருக்கிறது. பேச்சு வளர்ந்துவிட்டது; ஆனல் பேச்சுக் கலை நன்கு வளர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. தமிழ்நாட்டிலும் விரைவில் பேச்சுக் கலை வளர்ந்துவிடுமென்பதற்கு இப்போது ஒரு அறிகுறி காணப்படுகிறது.

நாளது 1949-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 10-ம் தேதி சென்னை மெமோரியல் மண்டபத்தில் ஒரு இலக்கிய அரங்கேற்றம் நடந்தது. பண்டிதர்களும் பேராசிரியர்களும் குழுமியிருந்த அந்த மகா சபையைப் பார்த்தபோது பண்டைக்கால ஞாபகம் நினைவுக்கு வந்தது. முத்தமிழை வளர்த்த மூவேந்தர்கள் காலத்தில் யாராவது ஒரு கவி புதிதாக ஒரு காவியத்தை இயற்றினல் அதற்கு அரங்கேற்றம் நடக்கும். பண்டிதர்களும் கவிஞர்களும் கூடிய ஒரு மாபெரும் சபை அந்த நூலை ஆராய்ந்து அது சிறப்புடையதாக இருக்குமானல் அதைப் பாராட்டிப் புகழும்; அதை எழுதிய ஆசிரியரைப் போற்றும். அவ்விதம் அரங்கேற்றப்பட்ட நூலுக்குத் தேச முழுவதும் ஒரு தனி மதிப்பு இருக்கும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னர் அன்றைய தினம் மெமோரியல் மண்டபத்தில் அத்தனை பேராலும் பாராட்டப்பட்டு அரங்கேற்றம் செய்யப்பட்ட நூலின் பெயர் மேடைத் தமிழ் என்பதாகும். மூவேந்தர்கள் காலத்திலிருந்து இன்று வரையில் தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் மட்டுமே இருந்து வந்தது. நான்காவது தமிழாகிய மேடைத் தமிழுக்குத் தனிச் சிறப்பு அளித்து அரங்கேற்றிய பெருமை தோழர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களுக்கு உரியது.

மேடைத்தமிழ் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. முதல் பகுதி பேச்சு இலக்கியத்தைப் பற்றியும் இரண்டாவது பகுதி பேச்சுத் தத்துவத்தைப் பற்றியும் விளக்குகிறது. பேச்சை ஆரம்பிப்பது எப்படி, முடிப்பது எப்படி, வாதம் செய்வது எப்படி,— என்னும் விஷயங்களைப் பற்றி ஆசிரியர் பல மேற்கோள்களை எடுத்துக் காட்டி அழகாக விளக்குவதைப் படிக்கும்போது, நாம் ஒரு புத்தகத்தைப் படிப்பதாகவே தோன்றவில்லை. ஆசிரியரே மேடைமேல் ஏறிப் பேச்சுத் தமிழைப் பற்றி முழக்குவதைப்போல் இருக்கிறது. புத்தகத்தின் கடைசியில், உலகப் புகழ்பெற்ற சில பேச்சாளர்களின் பேச்சுக்கள் மொழிப்பெயர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது மேடைப்பேச்சாளர்களாக விரும்புவோருக்கு மிக்க உதவியாய் இருக்கும். திரு. வி. க. அவர்கள் இந்நூலுக்கு வழங்கியிருக்கும் அணிந்துரையில், "இற்றைஞான்று 'மேடைத் தமிழ்' என்றொரு நூல் உருக்கொண்டுள்ளது. இம்முடி மிலைந்த ஒரு நூலை இதுகாறும் நீங்கள் கண்டதுண்டா? இது புது முறையில் சமைந்த ஒரு நூல்!" என்று பாராட்டிக் கூறுவது ஒன்றே இப் புத்தகத்தின் சிறப்பைப் பகரப் போதியதாகும். திரு. தெய்வ சிகாமணி ஆச்சாரியார் பேச்சுத் தமிழுக்கு ஆற்றியிருக்கும் தொண்டைப் பாராட்டுகிறோம்."

—கல்கி

"சுமார் 420 பக்கங்களுள்ள இந்தப் புத்தகம் நல்ல கடிதத்தில் அச்சிட்டு மிகவும் அழகாக வெளியிடப்பட்டுள்ளது. பிரசங்கம் பண்ணுவதில் இந்தக் காலத்தில் பலருக்கும் மிக்க ஆர்வம் இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் இந்நூல் பயன்பட வேண்டுமென்ற கருத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

மேடையிலே நின்று பேசுதற்கு ஏற்ற தமிழ் என்ற பொருளைக் கொண்டு மேடைத் தமிழ் என்று இந்த நூலுக்கு ஆசிரியர் பெயரமைத்திருக்கிறார். பேச்சுவன்மையில் பிரசித்தி பெற்ற பலருடைய உருவப்படங்களும் இதிலே காணப்படுகின்றன.

தமிழ் நாட்டில் பேச்சுவன்மையில் சிறந்த திரு. வி. கல்யாண சுந்தர முதலியாருடைய அணிந்துரையையும் இந்நூல் பெற்றிருக்கிறது.

இந்நூல் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. முதற் பகுதியில் பேச்சுவன்மை, பேச்சாளரின் இலக்கணம், பேச்சைத் தயாரித்தல், பேசும் உபாயம், பேச்சை எடுத்தல், தொடுத்தல், முடித்தல், நன்றி கூறல் முதலியனவாக 23 விஷயங்கள் அடங்கியுள்ளன. இரண்டாம் பகுதியில் தமிழ் பேச்சின் உயர்வு, பேச்சுப் பொருத்தம், பேச்சு அலங்காரம், பேச்சாளரும் ஆயுள் விருத்தியும், பேச்சுச்சுவை, சபையோர் மனப்பான்மை முதலிய 21 விஷயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குப் பின் 5 சேர்க்கைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் சேர்க்கையில் பல நாவலர்களின் கருத்துக்களும், 2-ம் சேர்க்கையில் ஆங்கிலத்தினின்றும் மொழி பெயர்த்த மேல்நாட்டு சொற்பொழிவுகளும், 3-ம் சேர்க்கையில், இந்திய நாவலரின் ஆங்கில சொற்பெருக்குகளும் நான்காம் சேர்க்கையில் தனித் தமிழ் விரிவுரைகளும், 5-ம் சேர்க்கையில் மேடைத் தமிழ் அகராதி முதலியவைகளும் அமைந்துள்ளன. ஆசிரியர் மிகவும் சிரமமெடுத்து விஷயங்களைப் பாகுபாடு செய்து இந்நூலை அமைத்திருப்பது பாராட்டத் தக்கது. * * *

சில பேச்சுக்கள் பேச்சாளரின் மேன்மையைக் காட்டுகிறது. சிலருடைய பேச்சுக்கள் எழுத்திலும், பேச்சிலும் நாம் நீக்க வேண்டியதற்கு உதாரணங்களாக உள்ளன.

இதுபோன்ற ஒரு நூலுக்கு நமது நாட்டில் இப்பொழுது அவசியம் உண்டு. இந் நூலால் தமிழ்நாடு பெரும் பயனடையும்."

—தினமணி

"இது தற்காலத்திற்கு மிகுந்த பயன் தரத்தக்கது. நாட்டில் பேச்சாளர்கள் பெருவிட்டார்கள். அவர்களுக்கு ஒரு வரம்பு ஏற்படுத்துதல் நல்லது. இந்நூல் அவர்களுக்கு வரம்பு கட்டும் இலக்கண (வரையறை) நூல். பேச்சின் தன்மை, பேச்சாளர் குணம், பேச்சாளர் படங்கள், உரைப்பகுதிகள், ஆங்கிலச் சொற்களின் தமிழ் மொழிபெயர்ப்பு முதலிய எண்ணிறந்த பகுதிகளைக் கொண்டது. திரு. வி. க. அவர்களுடைய அணிந்துரை கொண்ட இது பேச்சாளர் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத் தக்கது"

—சித்தாந்தம்

"மேடைத் தமிழ் என்ற இந்த நூல், 416 பக்கங்கள் கொண்ட ஒரு பெரிய புத்தகம். இரண்டு பாகங்களைக் கொண்டது. இந்தத்

துறையில் இந்த முறையில் வெளி வந்த முதல்நூல் இது எனலாம். சங்கீதம், ஓவியம், சிற்பம் இவற்றைப் போலவே மேடைப்பேச்சும் ஒரு கலை என்பதை அறிவாளிகள் யாவரும் ஒப்புக் கொள்வர். ரோம், கிரீஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இதை ஒரு கலையாக மதித்தனர். இந்தக் கலை பற்றிய பல நூல்களும் எழுந்துள்ளன. இங்கிலாந்திலும் இந்தக் கலைபற்றிய பல அரிய நூல்கள் உள. ஆசிய நாடுகளில் இதைக் கலையாக எண்ணி யாரும் நூல் எழுதியதாகத் தெரியவில்லை. தமிழர் பேச்சு வன்மையை ஒரு சிறந்த கலையாகவே கருதினார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள. திருவள்ளுவர் தம் குறளில் இதன் இலக்கணத்தைச் சொல்வன்மை முதலிய சில அதிகாரங்களில் தெளிவாக வகுத்துக் கூறுகிறார். இதை அவர் ஒரு நலம் என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

என்றாலும் வசன நடையில் இந்தக் கலையின் இலக்கணத்தையும் நுட்பங்களையும் பல உதாரணங்களோடு செவ்வனே விளக்கும் நூல் ஒன்று இதுவரையில் இல்லை. இது ஒரு பெருங் குறையே. இந்தக் குறையை இந்த நூல் போக்குகிறது.

அரசியல் கிளர்ச்சி காரணமாகவும், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி காரணமாகவும் சமூகச் சீர்திருத்தம் காரணமாகவும் இந்திய நாட்டில் பல அறிவாளிகள் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு, சென்ற நூற்றாண்டாகவே இருந்து வருகிறது. இவையேயன்றி மத சம்பந்தமான பேச்சாளர்களும் தோன்றிச் சிறக்கப் பேசி வருகின்றனர். இப்படித் தோன்றி விளங்கும் பேச்சாளர்கள் பலருள் சிலருக்கு எடுத்தக் காரியத்தில் உடனே வெற்றி கிடைக்கிறது. இவர்கள் பேச்சில் ஓர் அற்புதமான கவர்ச்சி அமைந்து கிடக்கிறது. இவர்கள் பேச்சைக் கேட்பவர்கள் தம்மையும் அறியாமலே இவர்கள் கொள்கைக்கு மாறி விடுகிறார்கள். இவர்கள் பேசும்போதெல்லாம் கேட்கவேண்டும் என்ற ஒரு போாவல் மக்கள் மனத்தைப் பற்றிக்கொள்ளுகிறது. இன்னும் சிலர் பேச்சில் ஓரளவு மட்டும் கவர்ச்சி இருக்கிறது. பேச்சைக் கேட்கும்போது மட்டும் இக்கவர்ச்சி தலை எடுக்கிறது. ஆனால் இது நீடிப்பதில்லை. சிலர் பேச்சில் கவர்ச்சியே இருப்பதில்லை. கேட்கும் போதே ஒருவகை வெறுப்பும் விரோத பாவமுமே கேட்போர் மனத்தில் தலையெடுக்கின்றன. இப்படியாகப் பல வகைப் பேச்சுக்கள் இருப்பதை நாம் உணர்ந்து வருகிறோம்.

இத்தகைய பேச்சுக்கள் பலவற்றைக் கேட்ட அநுபவத்தோடு பரந்த கல்வி அறிவும் பெற்ற ஆசிரியர் இந்தப் பேச்சுகளாகிய இலக்கியங்களிலிருந்து வகுத்தமைத்த பேச்சிலக்கணம் இது. தாம் கேட்ட பல பேச்சுக்களையும் வகுத்துக்கொண்டு ஒரு வகுப்பை மற்றொரு வகுப்போடும், ஒரு பேச்சை மற்றொரு பேச்சோடும் ஒப்பிட்

...சின் இலக்கணமாக எழுதியிருக்...

இன்ன இன்ன கருவிகளால் இன்ன இன்ன காரியம் சாத்திய மாகும் என்று சாதன சாத்திய முறையில் விளங்க வைக்கிறார் ஆசிரியர். தாம் எடுத்துக்கொண்ட பொருள் பற்றிய ஆழ்ந்த அறிவு, குரல் இனிமை, கேட்பவர் கவனம் பிறழாமல் இருப்பதற்கு வேண்டிய உபாயங்கள், ஆரம்பம், முடிவு, சொல் ஆட்சி, மேற்கோள் ஆட்சி தயாரிப்பு, கைக்குறிப்பு, சபை அறிதல், சந்தர்ப்ப அறிவு, பேசுபவர் உடை, தோற்றம், செய்கை முதலிய ஒவ்வொன்றைப் பற்றியும் ஆசிரியர் விரிவாக உதாரணங்களோடு ஆராய்ந்து முடிவு கட்டுகிறார். பல முறை சிறக்கப் பேசியவர்களும் சில சமயம் பேச்சில் தோல்வி அடைவதற்கு என்ன காரணங்கள் என்பதையும் உதாரண வாயிலாக விளக்குகிறார். அவையடக்கம், சபை விதிப்பு முதலியவற்றைப் பற்றியும் மனத்தில் படும்படி எழுதுகிறார்.

பாராளும் மன்றம் என்ற பார்லிமென்ட் பேச்சைப் பற்றித் தனியாகவே ஓர் அதிகாரம் எழுதியிருக்கிறார். ஒலி பெருக்கியின் முன் பேசும் ரகசியத்தைக் காட்டுகிறார்.

இவர் உதாரணங்களில் மேல்நாடு, கீழ்நாடு என்ற வித்தியாசம் இல்லை. உலகப் பேச்சாளர்களுள் சிறந்தவர்கள் பேச்சுகளிலிருந்து பல உதாரணங்களைக் காணலாம்.

தமிழ்ப் பேச்சுக்கு ஒரு தனிப் பண்பு உண்டு என்பதை விளக்க முயல்கிறார். எழுத்து உச்சரிப்புகள் சரியாக அமைவது நல்ல பேச்சின் ஓர் அம்சம் என்பதை அழுத்திச் சொல்லி, எழுத்து உச்சரிப்பைச் சித்திரங்கள் மூலம் விளக்கியிருக்கிறார்.

உலகப் பெரும் பேச்சாளர் படங்கள் பலவும், சில அரிய பேச்சுக்களும் இதில் இடம் பெறுகின்றன.

ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைத் திறம்படவும் படிப்போருக்கு விளங்கும் முறையிலும் கூறி வெற்றிபெற்றுவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். பேச்சுக்கலையின் விரிவான முதல் இலக்கண நூலாகிய இது தமிழ்ப் பேச்சாளர் பலருக்கு ஊன்றுகோலாகும். நல்ல பேச்சாளர் பலரை ஆக்கவும் உதவும்.

கடைசியில் இவர் கொடுத்திருக்கும் அகராதி இக்காலத்தில் பல புது விஷயங்களைப் பேச முற்படுவோருக்கு மிகவும் பயன்படும்.

—கலைமகள்

ஹெகின்பாதம், சுதேசமித்திரன்
முதலிய எல்லா உயர்தர புத்தக
வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
V. P. P. யிலும் அனுப்பப்படும்.
புத்தக வியாபாரிகளுக்கு 25%
கமிஷன் உண்டு.

காலிகோ விலை ரூ. 10—0—0

* *

கிடைக்குமிடம் ;

தி. தெ. ஐ. ஈசன் & Co.,

29-A, திருவேங்கிட முதலி தெரு,

சென்னை - 3